# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# இந்து சமய அறநிலையத்துறை

## மானியக் கோரிக்கை எண்.47
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2016–17

## பொருளடக்கம்


| பொருள் | பக்க எண் |
|---|---|
| முகவுரை | 1 |
| I - சட்டமும், நிருவாக அமைப்பும் | |
| இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் | 3 |
| இந்து சமய நிறுவனங்கள் | 5 |
| இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு | 6 |
| நிருவாக அமைப்பு | 7 |
| மண்டல மற்றும் மாவட்ட நிருவாகம் | 9 |
| ஆய்வாளர்கள் | 13 |
| நேர்முக உதவியாளர்கள் | 13 |
| துணை ஆணையர், பழனி | 13 |
| சரிபார்ப்பு அலுவலர்கள் | 13 |
| முதுநிலை கணக்கு அலுவலர்கள் | 14 |

| | |
|---|---|
| பொறியாளர்கள் | 15 |
| துறை ஸ்தபதி | 17 |
| மண்டல ஸ்தபதிகள் | 17 |
| செயல் அலுவலர்கள் | 18 |
| அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் | 19 |
| திருமடங்களின் நிருவாகம் | 20 |
| சமய நிறுவனங்களின் தணிக்கைகள் | 20 |
| உயர்நிலை ஆலோசனைக்குழு | 20 |
| மாவட்டக் குழு நியமனம் | 21 |
| அறங்காவலர்கள் நியமனம் | 22 |
| அறங்காவலர் நியமனத் தகுதிகள் | 22 |
| அறங்காவலர்களை நியமனம் செய்ய அதிகார வரம்பு | 23 |
| தக்கார் நியமனம் | 25 |
| **II - நில நிருவாகம்** | |
| நிலங்கள் விவரம் | 25 |
| நியாய வாடகை நிர்ணயம் | 26 |
| வருவாய் நீதிமன்றங்கள் | 27 |
| நிலங்களை மீட்டல் | 29 |

| | |
|---|---|
| ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் நில அளவையர் நியமனம் | 31 |
| ஆக்கிரமிப்பு அகற்றுதல் | 31 |
| கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல் | 32 |
| **III - சிறப்புத் திட்டங்கள்** | |
| அன்னதானத் திட்டம் | 33 |
| நாள் முழுவதும் அன்னதானம் | 34 |
| ஆன்மீக மற்றும் ஒழுக்க நெறி வகுப்பு | 35 |
| சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் | 36 |
| யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம் | 36 |
| ஏழை எளியோருக்குத் திருமணம் | 39 |
| கம்பிவட ஊர்திகள் | 40 |
| மின்கல மகிழுந்து | 41 |
| கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம் | 43 |
| ஒரு கால பூஜைத் திட்டம் | 43 |
| சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம் | 45 |
| பழமையான திருக்கோயில்களின் கால பூஜைகளைப் புத்துயிரூட்டல் | 46 |
| **IV - திருப்பணி** | |
| திருப்பணி ( பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) | 47 |

| | |
|---|---|
| திருப்பணி நிதி | 47 |
| நன்கொடை | 49 |
| திருக்கோயில் நிதி | 49 |
| நிதிமாற்றம் | 50 |
| அரசு மானியம் | 50 |
| இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி | 51 |
| பொது நலநிதி | 51 |
| ஆலய மேம்பாட்டு நிதி | 52 |
| கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி நிதி | 52 |
| திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி | 54 |
| உபயத் திருப்பணி | 54 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி | 55 |
| நிதி ஆணைய மானியம் | 56 |
| சுற்றுலாத்துறை நிதி | 57 |
| பழமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி – தொல்லியல் வல்லுநர் குழு | 58 |
| பழமையான ஓவியங்களை பழமை மாறாது புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்– சிறப்பாக சுவரோவியங்கள் | 59 |

| | |
|---|---|
| திருக்குளங்களை புதுப்பித்து திருப்பணி செய்தலும், மழைநீர் சேகரிப்பும் | 61 |
| திருப்பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க தனி மென்பொருள் | 62 |
| பட்டயப்பொறியாளர்கள் | 63 |
| ஸ்தபதிகள் | 63 |
| குடமுழுக்கு (கும்பாபிஷேகம்/சம்ப்ரோக்ஷணம்) | 64 |
| திருத்தேர் பராமரிப்பு | 65 |
| தங்கரதம் மற்றும் வெள்ளிரதம் | 66 |
| **V - பக்தர்கள் நலன்** | |
| குடிநீர் வசதி | 75 |
| நவீன கழிப்பிட வசதி | 75 |
| தங்கும் வசதி | 76 |
| திருக்கோயில் வழிகாட்டி/ தகவல் பலகைகள் | 77 |
| பக்தர்களுக்கு தரமான குங்குமம் வழங்குதல் | 77 |
| நன்கொடையாளர் வரவேற்பு மையங்கள் | 78 |
| மானசரோவர், முக்திநாத் யாத்திரை | 78 |
| புடவை, வேட்டி வழங்குதல் | 79 |

| | |
|---|---|
| **VI - திருக்கோயில்கள் தூய்மையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும்** | |
| உழவாரப்பணி | 80 |
| ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப்பணி | 81 |
| திருக்கோயில் சுற்றுச்சூழல் காத்திட பிளாஸ்டிக் பயன்பாடு முற்றிலும் தவிர்த்தல் | 81 |
| மாற்று மின்திட்டம் | 82 |
| **VII - பாதுகாப்பு** | |
| உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் பாதுகாப்பு | 82 |
| களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம் | 83 |
| உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் | 84 |
| திருக்கோயில் பாதுகாப்புப் படை | 88 |
| **VIII - கல்விப்பணியும், அறப்பணியும்** | |
| கல்வி நிறுவனங்கள் | 89 |
| வேத ஆகம பாடசாலைகள் | 96 |
| கல்வி நிறுவனங்களுக்கு தரச்சான்று | 97 |
| சமூக நல நிறுவனங்கள் | 97 |
| கருணை இல்லங்கள் | 98 |
| பள்ளி கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள் | 104 |
| கோசாலைகள் | 104 |

| **IX - திருக்கோயிலும், தமிழும்** | |
|---|---|
| போற்றி நூல்கள் | 105 |
| தமிழ்ப்புத்தாண்டு விழா | 106 |
| பாவை விழா | 107 |
| திருக்கோயில்களில் இசைவாணர் நியமனம் | 107 |
| **X - அருளாளர்கள் விழா** | |
| சேக்கிழார் விழா | 108 |
| திருஞானசம்பந்தர் இசை விழா | 108 |
| ஔவையார் விழா | 109 |
| தாயுமானவர் விழா | 109 |
| திருவள்ளுவர் திருநாள் | 110 |
| அருணகிரிநாதர் விழா | 110 |
| கோச்செங்கட்சோழ நாயனார் விழா | 110 |
| ஆழ்வார்கள் விழா | 111 |
| **XI – வெளியீடுகள்** | |
| தலவரலாறும், தலபுராணமும் | 111 |
| பயணியர் மாவட்ட கையேடுகள் | 112 |
| "திருக்கோயில்" – திங்களிதழ் | 112 |
| ஆகம நூல்களையும், இதர நூல்களையும் தமிழில் வெளியிடுதல் | 113 |
| **XII - பயிற்சித்திட்டங்கள்** | |
| புத்தொளிப் பயிற்சி திட்டம் | 113 |

| | |
|---|---|
| பொறியாளர்களுக்கு ‘‘பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு’’ என்னும் குறுகிய காலப்பயிற்சி | 114 |
| திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு ‘‘பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு’’ என்னும் குறுகிய காலப்பயிற்சி | 115 |
| மனித நேயப் பயிற்சி | 116 |
| **XIII - திருக்கோயில் ஊழியர் நலத்திட்டங்கள்** | |
| நலத்திட்ட விவரம் | 116 |
| குடும்ப நல நிதி | 117 |
| சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் | 118 |
| மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | 119 |
| திருக்கோயில் ஊழியர் நல நிதித்திட்டம் | 120 |
| கருணை அடிப்படையில் பணி நியமனம் | 120 |
| தற்காலிக பணியாளர்கள் பணிவரன்முறை | 121 |
| திருக்கோயில் பணியாளர் ஓய்வூதியத் திட்டங்கள்—அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு ஓய்வூதியம் | 121 |

| | |
|---|---|
| திருக்கோயிலில் பணிபுரியும் பிற ஊழியர்கள் ஒய்வூதியத் திட்டம் – பணியாளர் சேமநல நிதித்திட்டம், துறை நிலையிலான ஒய்வூதியத் திட்டம் | 123 |
| திருக்கோயில் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம் | 125 |
| **XIV - கிராமப்புற பூசாரிகள் நலன்** | |
| கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம் | 125 |
| கிராமப்புற பூசாரிகள் ஒய்வூதியத்திட்டம் | 126 |
| **XV - மகாமகம்** | 126 |
| **நிறைவுரை** | 128 |

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## இந்து சமய அறநிலையத்துறை

## மானியக்கோரிக்கை எண்.47

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016–2017

**முகவுரை**

தமிழ் கூறு நல்லுலகத்தின் பெருமை, எண்ணற்ற திருக்கோயில்கள், வான்முட்டும் கோபுரங்கள், கலைகள், அரிய சிற்பங்கள் எனத் திருக்கோயில்களைச் சார்ந்தே அமையப் பெற்றுள்ளன.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்

செம்பொருள் காண்ப தறிவு."

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப மானுட சமூகத்தைப் பண்பட்ட சமுதாயமாக மாற்றுவது, அரசின் இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும். ஆகவே தமிழகத் திருக்கோயில்களை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி,

மனிதவள மேம்பாட்டு மையங்களாகவும் கருத வேண்டியுள்ளது. அந்த வகையில் வாழ்வியலின் கூறுகளான கலைகளின் கருவூலங்களாகவும், மனதைப் பண்படுத்தும் மையங்களாகவும் திருக்கோயில்கள் அமையப் பெற்றுள்ளன. எனவே, இத்திருக்கோயில்கள் நன்கு பராமரிக்கப்படுவது, அவற்றின் சொத்துக்கள் நன்முறையில் பாதுகாக்கப்படுவது, அதிலிருந்து வருவாய் ஈட்டி திருக்கோயில் பூசைகள் முறையாக நடத்தப்படுவது ஆகியவற்றை உறுதி செய்வது அரசின் கடமைகளில் முக்கியமானதாகும்.

"சேயினும் நல்லன் அணியன் நல்அன்பர்க்குத்
தாயினும் நல்லன்..."

எனும் திருமந்திரத்திற்கு இலக்கணமாகத் தாயினும் சாலப் பரிந்து, "**மக்களால் நான், மக்களுக்காகவே நான்**" என்ற கொள்கை முழக்கத்தோடு நல்லாட்சி புரிந்து கொண்டிருக்கும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அருளாட்சியில் பல முன்னேற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

# I - சட்டமும், நிருவாக அமைப்பும்

## இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம்

**2. 1959** ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் (சட்டம் **22/1959**), இந்து சமய திருக்கோயில்கள், திருமடங்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிருவாக மேலாண்மையை மிகுந்த கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இந்து சமய அறநிலைக் கொடை நிறுவனங்களை நிர்வகிப்பது குறித்தும் முந்தைய சட்டங்களில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு தொகுத்து அரசால் இயற்றப்பட்ட சட்டமாகும்.

**3.** முதலில் மதராஸ் நிலை கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் எண்.VII/1817 உருவாக்கப்பட்டது. இச்சட்டம் **1863–**ல் திரும்பப் பெறப்பட்டது (சட்டம் XX /1863). பின்னர் மதராஸ் இந்து சமய அறக்கொடை சட்டம், **1926** (சட்டம் II/1927) இச்சட்டத்திற்கு மாற்றாக நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டது. **1951–**ல் சட்டம் XIXன் படி வாரியம் ரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இந்து

சமய மற்றும் அறநிலைக் கொடைகளின் நிருவாகம், ஆணையரைத் தலைவராகவும் பல நிலைகளில் அலுவலர்களுக்கு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. **1951** சட்டம் நீக்கறவு செய்யப்பட்டு அதற்கு பதிலாக தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் **1959 (**சட்டம் **22/1959)** இயற்றப்பட்டு அதில் ஆணையர், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் நிலைகளில் அலுவலர்கள் கொண்ட நிருவாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

**4.** இந்து சமய நிறுவனங்களை நிருவகித்திட பல்வேறு வழிவகைகளையும் அவற்றைச் செயல்படுத்திட தேவையான அதிகாரங்களையும் கடமைகளையும் இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு இச்சட்டம் வரையறை செய்துள்ளது. மேலும் இச்சட்டம் இந்து சமய அறநிறுவனங்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளை கொண்டுள்ளது. இச்சட்டத்தை சமண சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கு விரிவுபடுத்தவும் அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

**இந்து சமய நிறுவனங்கள்**

**5.** இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் **38,630** இந்து சமய மற்றும் சமண சமய நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | **36,590** |
| 2. | திருமடங்கள் | **56** |
| 3. | திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள் | **57** |
| 4. | குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | **1,721** |
| 5. | அறக்கட்டளைகள் | **189** |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | **17** |
| | **கூடுதல்** | **38,630** |

**இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு**

**6.** இந்து சமய நிறுவனங்கள் ஆண்டு வருமான அடிப்படையில் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| **வ. எண்.** | **சமய நிறுவனங்கள் வகைப்பாடு** | **நிறுவனத்தின் ஆண்டு வருமானம்** | **நிறுவனங்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | பட்டியலைச் சாராத நிறுவனங்கள் சட்டப்பிரிவு–49(1) | ரூ.10,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 34,077 |
| 2. | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் சட்டப்பிரிவு–46(i) | ரூ.10,000/–லிருந்து ரூ.2,00,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 3,571 |
| 3. | சட்டப்பிரிவு–46(ii) | ரூ.2,00,000/–லிருந்து ரூ.10,00,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 662 |
| 4. | சட்டப்பிரிவு–46(iii) | ரூ.10,00,000/–மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ளவை | 320 |
| | | **கூடுதல்** | **38,630** |

## நிருவாக அமைப்பு

7. இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறையாகப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், மேற்பார்வையிடவும் 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக தலைமைப் பொறுப்பில் ஆணையர் செயல்படுகிறார்.

8. இந்து சமய அறநிலையத் துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மேலாண்மை, திருப்பணி, வழக்குகள், தணிக்கை போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் விவரம் பின்வருமாறு:

| வ.எண். | பதவி | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | கூடுதல் ஆணையர் (பொது) | 1 |
| 2. | கூடுதல் ஆணையர் (விசாரணை) | 1 |
| 3. | கூடுதல் ஆணையர் (திருப்பணி) | 1 |
| 4. | இணை ஆணையர் (தலைமையிடம்) | 1 |
| 5. | இணை ஆணையர் (சட்டச்சேர்மம்) | 1 |
| 6. | இணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்) | 1 |

| | | |
|---|---|---|
| 7. | இணை ஆணையர் (சரிபார்ப்பு–தலைமையிடம்) | 1 |
| 8. | உதவி ஆணையர் (சட்டச்சேர்மம்) | 1 |
| 9. | உதவி ஆணையர் (கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம்) | 1 |
| 10. | ஆசிரியர் (திருக்கோயில் திங்களிதழ்) | 1 |

**இத்துறை தலைமையிடத்தில் பணிபுரியும் மாற்றுத்துறை அலுவலர்கள் விவரம் பின்வருமாறு:**

| வ. எண். | பதவி | பணியிடங்கள் | துறை |
|---|---|---|---|
| 1. | தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை) | 2 | வருவாய்த்துறை |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை |
| 3. | செயற்பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை |
| 4. | உதவிக் கோட்டப்பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை |
| 5. | உதவிப்பொறியாளர் / தொழில்நுட்ப உதவியாளர் | 1 | பொதுப்பணித்துறை |
| 6. | உதவிப்பொறியாளர் (சிவில்) | 1 | பொதுப்பணித்துறை |
| 7. | உதவிப் பொறியாளர் (மின்) | 1 | மின் துறை |
| 8. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 | நெடுஞ்சாலைத்துறை |

| | | | |
|---|---|---|---|
| 9. | வரைதொழில் அலுவலர் | 2 | பொதுப்பணித்துறை |
| 10. | இளநிலை வரைதொழில் அலுவலர் | 2 | பொதுப்பணித்துறை |
| 11. | முதுநிலை கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத்துறை |
| 12. | உதவி கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத்துறை |
| 13. | தலைமைத் தணிக்கை அலுவலர் (அரசு துணைச் செயலாளர் நிலை) | 1 | நிதித்துறை |
| 14. | துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர் | 1 | செய்தி – மக்கள் தொடர்புத் துறை |

**மண்டல மற்றும் மாவட்ட நிருவாகம்**

**9.** மாநில அளவில் **11** மண்டலங்களையும் மாவட்ட அளவில் **28** கோட்டங்களையும் உள்ளடக்கி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் இணை ஆணையரும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு இந்து சமய நிறுவனங்களின் நிருவாகம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 1 | இணை ஆணையர், சென்னை | 1. உதவி ஆணையர், சென்னை | சென்னை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் மாதவரம், அம்பத்தூர், திருவொற்றியூர் வட்டங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் வட்டங்கள் |
| 2. | இணை ஆணையர், வேலூர் | 2. உதவி ஆணையர், திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம் (மாதவரம், அம்பத்தூர், திருவொற்றியூர் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 3. உதவி ஆணையர், காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம் (தாம்பரம் , ஆலந்தூர், சோழிங்கநல்லூர் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 4. உதவி ஆணையர், வேலூர் | வேலூர் மாவட்டம் |
| 3. | இணை ஆணையர், சேலம் | 5. உதவி ஆணையர் தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| | | 6. உதவி ஆணையர், சேலம் | சேலம் மாவட்டம் |
| | | 7. உதவி ஆணையர், நாமக்கல் | நாமக்கல் மாவட்டம் |
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர் | 8. உதவி ஆணையர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | 9. உதவி ஆணையர், ஈரோடு | ஈரோடு மாவட்டம் |
| | | 10. உதவி ஆணையர், திருப்பூர் | திருப்பூர் மாவட்டம் |
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர் | 11. உதவி ஆணையர், தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டம் (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 12. உதவி ஆணையர், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மாவட்டம் (சீர்காழி, மயிலாடுதுறை, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் நீங்கலாக) |
| | | 13. உதவி ஆணையர், திருவாரூர் | திருவாரூர் மாவட்டம் |
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை | 14. உதவி ஆணையர், கும்பகோணம் | தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் |
| 7. | இணை ஆணையர், விழுப்புரம் | 15. உதவி ஆணையர், கடலூர் | கடலூர் மாவட்டம் |
| | | 16. உதவி ஆணையர், விழுப்புரம் | விழுப்புரம் மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| | | 17. உதவி ஆணையர், திருவண்ணாமலை | திருவண்ணாமலை மாவட்டம் |
| 8. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | 18. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| | | 19. உதவி ஆணையர், அரியலூர் | பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் |
| | | 20. உதவி ஆணையர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| | | 21. உதவி ஆணையர், கரூர் | கரூர் மாவட்டம் |
| 9. | இணை ஆணையர், மதுரை | 22. உதவி ஆணையர், மதுரை | மதுரை மாவட்டம் |
| | | 23. உதவி ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள் |
| 10. | இணை ஆணையர், சிவகங்கை | 24. உதவி ஆணையர், விருதுநகர் | விருதுநகர் மாவட்டம் |
| | | 25. உதவி ஆணையர், பரமக்குடி | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் |
| 11. | இணை ஆணையர், திருநெல்வேலி | 26. உதவி ஆணையர், திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம் |
| | | 27. உதவி ஆணையர், தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம் |
| | | 28. உதவி ஆணையர், நாகர்கோயில் | கன்னியாகுமரி மாவட்டம் |

**ஆய்வாளர்கள்**

**10.** இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள், கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவியாக, களப்பணியில் வருவாய்த்துறை வட்ட அடிப்படையில் 224 ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

**நேர்முக உதவியாளர்கள்**

**11.** பழனி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், திருத்தணி ஆகிய இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் உதவி ஆணையர் நிலையில் நேர்முக உதவியாளர் பணியிடங்கள் உள்ளன.

**துணை ஆணையர், பழனி**

**12.** பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவியாக துணை ஆணையர் பணியிடம் ஒன்று உள்ளது.

**சரிபார்ப்பு அலுவலர்கள்**

**13.** திருக்கோயில்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களை மதிப்பீடு

செய்வதற்காக தலைமையிடத்தில் இணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலரும், ஏழு இணை ஆணையர் மண்டலங்களுக்கு துணை ஆணையர் நிலையில் ஆறு சரிபார்ப்பு அலுவலர்களும், நான்கு இணை ஆணையர் மண்டலங்களுக்கு உதவி ஆணையர் நிலையில் நான்கு சரிபார்ப்பு அலுவலர்களும் பணிபுரிகின்றனர். தலைமையிடத்திலும், மண்டலங்களிலும் உள்ள ஒவ்வொரு சரிபார்ப்பு அலுவலருக்கும் உதவியாக ஒரு நகை மதிப்பீட்டு வல்லுநர் வீதம் 11 பணியிடங்களும் ஒரு இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் வீதம் 11 பணியிடங்களும் உள்ளன. தற்போது நகை மதிப்பீட்டு வல்லுநர் பதவிக்கும், இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கும் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையின்படி பெண்களையும் நியமனம் செய்யும் வகையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**முதுநிலை கணக்கு அலுவலர்கள்**

**14.** இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் உள்ள எட்டு திருக்கோயில்களில் இவர்களுக்கு உதவியாக எட்டு மண்டலத் தணிக்கை அலுவலர்கள் முதுநிலை கணக்கு அலுவலர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**பொறியாளர்கள்**

**15.** திருக்கோயில்களின் திருப்பணிகளான, புதுப்பித்தல் / பழமை மாறாமல் புனரமைத்தல், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளல், மதிப்பீடு தயாரித்தல், கூர்ந்தாய்வு செய்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள பொறியாளர்கள் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் தலைமையிடத்தில் பணிபுரிகின்றனர்.

**16.** ஒவ்வொரு இணை ஆணையர் அலுவலகத்திலும் (விழுப்புரம் மண்டலம் தவிர) ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும், ஒரு இளநிலை வரைதொழில் அலுவலரும் பணியாற்றுகின்றனர். 25 உதவி ஆணையர் அலுவலகங்களில் 25 உதவிப் பொறியாளர்கள் பணிபுரிகின்றனர். திருச்சி, சேலம், மதுரை ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் ஒரு செயற்பொறியாளர் வீதம் மூன்று செயற்பொறியாளர்கள் மற்றும் ஒரு மின்உதவிப் பொறியாளர் வீதம் மூன்று மின்உதவிப் பொறியாளர்கள் உள்ளனர்.

**17.** பழனி, சமயபுரம், மதுரை, திருத்தணி, பண்ணாரி, மருதமலை, ஆனைமலை, அழகர்கோவில், திருவேற்காடு மற்றும் சுவாமிமலை ஆகிய திருக்கோயில்களை பாதுகாத்து

புதுப்பிக்கவும் புதிய பணிகளை மேற்கொள்ளவும் திருக்கோயில்களைச் சார்ந்த பொறியாளர்கள் பணிபுரிகின்றனர்.

மேலும் ஸ்ரீரங்கம், பழனி, திருச்செந்தூர், திருத்தணி, திருவண்ணாமலை, சுசீந்திரம், மற்றும் திருவாரூர் ஆகிய திருக்கோயில்களில் பொதுப்பணித்துறை மூலம் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் அயற்பணியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

**18.** திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ஒரு முதுநிலை வரைதொழில் அலுவலர் பணியிடம் வீதம் நான்கு பணியிடங்களும், சோளிங்கர் அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயில், திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவசுவாமி திருக்கோயில், அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், நாமக்கல் அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நான்கு வரைதொழில் அலுவலர்கள் பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டு சென்னை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு இணை ஆணையர் மண்டலங்களில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிகின்றனர்.

**துறை ஸ்தபதி**

**19.** திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் (பாதுகாத்து புதுப்பித்தல், புனரமைத்தல்), சிற்ப சாத்திரம், பழங்கால திருக்கோயில் கட்டுமான முறைகள், வடிவமைப்புகள், வர்ணலேபனங்கள், அளவுகள், கட்டுமானப்பொருட்கள் அதன் தரம் குறித்து தகுந்த ஆலோசனைகள் வழங்கவும் சிற்ப சாத்திர அடிப்படையில் ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், வரைபடங்களை சிற்ப சாத்திர அடிப்படையில் சரிபார்த்து வழங்கவும் கல்வித்தகுதி மற்றும் அனுபவத்தகுதி வாய்ந்த ஸ்தபதி ஒருவர் இந்து சமய அறநிலையத்துறையில் கண்காணிப்பு பொறியாளர் நிலையில் துறை ஸ்தபதியாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார். இவர் மேற்கண்ட சிற்பசாத்திரம் தொடர்பான ஆலோசனைகளை இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு வழங்கி வருகிறார்.

**மண்டல ஸ்தபதிகள்**

**20.** திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளையும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகளால் செய்யப்படும் மதிப்பீடுகளையும் மேலாய்வு செய்யவும் வரைபடங்களைச் சரிபார்க்கவும் மாநில அளவில் ஐந்து மண்டல ஸ்தபதிகள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்தனர்.

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் **2011–ல்** ஆட்சிப் பொறுப்பேற்றபின் திருக்கோயில்களின் திருப்பணிகளில் ஏற்பட்ட தொய்வினைக் கண்ணுற்று திருப்பணிகளை விரைந்து முடித்திட ஏதுவாக **2012–2013**ஆம் நிதியாண்டில் ஆறு மண்டல ஸ்தபதிகள் பணியிடம் புதியதாக ஏற்படுத்த ஆணையிட்டு பணி நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட **11** மண்டல ஸ்தபதிகளுக்கும் மாத தொகுப்பூதியம் ரூ.**4000/–**லிருந்து ரூ.**15,000/–**ஆக உயர்வு செய்து திருக்கோயில்களின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

இதன் வாயிலாக ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திற்கும் ஒரு ஸ்தபதி என்ற நிலை ஏற்பட்டு திருக்கோயில் திருப்பணிகள் பழமை மாறாது விரைவாக நடந்தேறி வருகின்றன.

**செயல் அலுவலர்கள்**

**21.** திருக்கோயில்களின் வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், அவற்றின் முக்கியத்துவம், பணிச்சுமை மற்றும் இதர பணிகளைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மையுடன் நிர்வகிக்க

செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :

| **வ.எண்.** | **செயல் அலுவலர் நிலை** | **பணியிடங்கள்** |
|---|---|---|
| 1. | இணை ஆணையர் | 11 |
| 2. | துணை ஆணையர் | 9 |
| 3. | உதவி ஆணையர் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை 1 | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை 2 | 111 |
| 6. | செயல் அலுவலர் நிலை 3 | 250 |
| 7. | செயல் அலுவலர் நிலை 4 | 154 |
| | **கூடுதல்** | **628** |

**அலுவலர்களுக்கு மடிக்கணினிகள்**

**22.** கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், அனைத்து நிலை செயல் அலுவலர்கள், களப்பணியாற்றும் சரக ஆய்வர்கள் மற்றும் தணிக்கைப் பிரிவில் பணியாற்றும் பல்வேறு நிலை அலுவலர்கள் ஆக மொத்தம் **767** அலுவலர்களுக்கு தங்கள் பணிகளை திறம்பட செயல்படுத்துவதற்காக மடிக்கணிணிகள் துறைமூலம் வழங்கப்பட்டுள்ளது.

**திருமடங்களின் நிருவாகம்**

**23.** இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் **56** திருமடங்கள் உள்ளன. இத்திருமடங்களின் நிருவாகத்தைக் கண்காணிக்க ஒரு மண்டலத் தணிக்கை அலுவலர், ஒரு கண்காணிப்பாளர், இரண்டு ஆய்வாளர்கள், இரண்டு தணிக்கை ஆய்வாளர்கள், இரண்டு உதவியாளர்கள் ஆகியோர் ஆணையருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் பணிபுரிகின்றனர்.

**சமய நிறுவனங்களின் தணிக்கைகள்**

**24.** இந்து சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய தலைமைத் தணிக்கை அலுவலர் ஒருவர் பணிபுரிகின்றார். இவருக்கு உதவியாக **2** துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்களும் **18** மண்டலத் தணிக்கை அலுவலர்களும் **28** உதவித் தணிக்கை அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

**உயர்நிலை ஆலோசனைக் குழு**

**25. 1959–**ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்க உயர்நிலை ஆலோசனைக்குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த குழு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது தலைமையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுச் செயலாளர் அலுவல்சார் உறுப்பினராகவும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவல்சார் உறுப்பினர்–செயலராகவும் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களையும் உள்ளடக்கியது.

**மாவட்டக் குழு நியமனம்**

**26.** ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அறநிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க மூன்றுக்கு குறையாத ஐந்துக்கு மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட குழு அரசால் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. இக்குழு பத்து இலட்சம் ரூபாயும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களைத் தவிர, பிற அறநிறுவனங்களுக்கு அறங்காவலர் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரித்து அளிக்க வேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

**அறங்காவலர்கள் நியமனம்**

**27.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை மேலாண்மை செய்வதற்காக பரம்பரை நிருவாகத்தில் இல்லாத ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் மூன்று அறங்காவலர்களுக்கு குறையாமலும் ஐந்து அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும். இக்குழுவில் பெண் உறுப்பினர் ஒருவரும் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இடம் பெறவேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும்.

**அறங்காவலர் நியமன தகுதிகள்**

**28. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 25A-ன் கீழ் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் பெறுவதற்கு கீழ்க்காணும் தகுதி வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அ. கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்.

ஆ. சமய நிறுவனம் உள்ள பகுதியில் நன்னடத்தை, நற்பெயர் மற்றும் மரியாதைக்குரியவராக இருத்தல் வேண்டும்.

இ. திருக்கோயில் அறங்காவலர் பணியினைச் செய்வதற்கு தேவையான நேரத்தையும் மற்றும் உரித்தத்தையும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

ஈ. மேலும், இதுபோன்ற குறிப்பிட்ட பிற சிறப்புத் தகுதிகளைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.

**அறங்காவலர்களை நியமனம் செய்ய அதிகார வரம்பு :**

**அரசு**

**29.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **46(iii)–**ன் கீழ் உள்ள பத்து இலட்சம் ரூபாய் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு ஐந்து பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அரசால் நேரடியாக நியமிக்கப்படுவர்.

**ஆணையர்**

**30.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **46(ii)–**ன் கீழ் உள்ள இரண்டு இலட்சம்

ரூபாயிலிருந்து பத்து இலட்சம் ரூபாய்க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**இணை ஆணையர்**

**31.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **46(i)–**ன் கீழ் உள்ள பத்தாயிரம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அந்தந்த மண்டல இணை ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**உதவி ஆணையர்**

**32.** இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு **49(1)–**ன் கீழ் உள்ள பத்தாயிரம் ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அந்தந்த மாவட்ட உதவி ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**33.** ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரால் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமிக்கப்படும் போது இந்து சமய நிறுவனங்களில் கூடுதலாக

இரண்டு பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் தேவையெனில் அரசு நியமனம் (Nomination) செய்யலாம்.

**தக்கார் நியமனம்**

**34.** அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அடுத்த அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும் வரை, திருக்கோயிலின் அறங்காவலருக்குரிய கடமைகளை செய்திட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

## II - நில நிருவாகம்

**நிலங்கள் விவரம்**

**35.** மொத்தம், **4,78,282.76** ஏக்கர் பரப்புடைய நிலங்கள் கீழ்க்கண்ட விவரப்படி இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளன.

| நிலத்தின் வகைப்பாடு | திருக்கோயில் நிலங்கள் | திருமடம் நிலங்கள் | மொத்த நிலங்கள் |
|---|---|---|---|
| | (ஏக்கர் இலட்சத்தில்) | | |
| நன்செய் | 1.83 | 0.21 | 2.04 |
| புன்செய் | 2.18 | 0.35 | 2.53 |
| மானாவாரி | 0.21 | இல்லை | 0.21 |
| **கூடுதல்** | **4.22** | **0.56** | **4.78** |

**36.** இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான **22,600** கட்டடங்களும் **33,665** மனைகளும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. விவசாய நிலங்களை **1,23,729** குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். மேற்குறிப்பிட்ட அசையாச் சொத்துக்களிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.697 கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது. இதில் 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.275 கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது.

**நியாய வாடகை நிர்ணயம்**

**37. 1959–**ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கு சட்டப்பிரிவு 34A-ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி மண்டல இணை ஆணையர், திருக்கோயில் செயல் அலுவலர் அல்லது அறங்காவலர் அல்லது அறங்காவலர் குழுத் தலைவர், பதிவுத்துறையின் மாவட்டப் பதிவாளர் கொண்ட நியாய வாடகை நிர்ணய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய வாடகை நிர்ணயக் குழுவின் மூலமாக வணிகம், குடியிருப்பு போன்ற பயன்பாடுகள் உள்ள மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு உரிய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

**வருவாய் நீதிமன்றங்கள்**

**38.** இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களுக்கு வரவேண்டிய குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யவும், விவசாய நிலங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கவும், குத்தகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தமிழ்நாடு பொது பொறுப்புரிமை அமைப்பு (விவசாய நிலங்கள் ஒழுங்குபடுத்தும் மற்றும் மேலாண்மை) சட்டம், 1961 [Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961]–ன் கீழ் இந்து சமய நிறுவனங்களால் தனித்துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவை தீர்வு செய்யப்படுகின்றன. இவ்வாறான வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட விவரப்படி செயல்படுகின்றன.

| **வருவாய் நீதிமன்றங்கள்** | **முகாம் வருவாய் நீதிமன்றங்கள்** |
|---|---|
| **1.** தஞ்சாவூர் | **1.** கும்பகோணம் |
| **2.** திருச்சிராப்பள்ளி | **2.** சேலம் |
| **3.** மயிலாடுதுறை | **3.** தென்காசி |
| **4.** திருவாரூர் | |
| **5.** கடலூர் | |

| | |
|---|---|
| **6.** மதுரை<br>**7.** லால்குடி<br>**8.** மன்னார்குடி<br>**9.** நாகப்பட்டினம்<br>**10.** திருநெல்வேலி | |

**39. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையின்படி மேற்குறிப்பிட்ட வருவாய் நீதிமன்றங்களில் **2012–2013**–ஆம் ஆண்டில் கூடுதலாக லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் வாயிலாக **2015–2016**–ஆம் நிதி ஆண்டில் மட்டும் வருவாய் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **15877** வழக்குகளில் **6539** வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு ரூ.**810.34** இலட்சம் குத்தகை நிலுவைத் தொகை வசூலிக்க உத்தரவு பெறப்பட்டு ரூ.**246.37** இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ரூ.**595.73** இலட்சம் குத்தகை நிலுவை வசூலிக்கப்பட்டுள்ளது. குத்தகை நிலுவையை முழுமையாக வசூலித்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிலங்களை மீட்டல்**

**40.** இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டச் (Updating Registry Scheme) செயலாக்கத்தின் போது தனிப்பட்ட நபர்களின் பெயரில் தவறாகப் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையை மாற்றி மீண்டும் அந்தந்த திருக்கோயில்களின் பெயரில் பட்டா பெறுவதற்காக மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இரு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

**41.** கடந்த ஐந்து ஆண்டுகளில் தனியார் பெயரில் தவறாகப் பட்டா மாற்றம் செய்யப்பட்ட **719** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **4439.43** ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களை கண்டறிந்து சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. **2015–2016–**ஆம் ஆண்டில் மட்டும் **170** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **1034.21** ஏக்கர் நிலங்கள் மீண்டும் திருக்கோயில்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**42. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அரசால் கடந்த ஐந்து ஆண்டுகளில் **138** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **582.93** ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய நிலங்களின் பதிவுகள் கணினிச் சிட்டாவில் தவறாக தனியார் பெயரில் இருந்ததை திருக்கோயில் பெயரில் பதிவு மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. **2015–2016–**ஆம் ஆண்டில் மட்டும் **20** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **19.02** ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலங்கள் தனியார் பெயரில் இருந்து திருக்கோயில் பெயரில் மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**43.** மேலே குறிப்பிட்டவாறு திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டவற்றையும், கணினி சிட்டாவில் தனி நபர் பெயரில் பதிவு செய்யப்பட்டவற்றையும், மாநிலம் முழுவதும் கண்டறிந்து இந்து சமய அறநிறுவனங்களின் பெயருக்கு மாற்றி, அசையாச் சொத்துக்களைப் பாதுகாக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் நில அளவையர் நியமனம்**

**44.** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டிருந்ததை கண்டறிந்து மீண்டும் திருக்கோயில் பெயரில் மாற்றி ஆணை பிறப்பிக்க ஏதுவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள தொகுப்பூதிய அடிப்படையில் **9** ஓய்வு பெற்ற துணை ஆட்சியர்கள், **19** ஒய்வு பெற்ற வட்டாட்சியர்கள், **10** ஓய்வு பெற்ற நில அளவையர் ஆகியோர் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

**ஆக்கிரமிப்பு அகற்றுதல்**

**45.** கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த **1977.37** ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களும், **316.0402** கிரவுண்டு பரப்பளவுள்ள மனைகளும், **155.0498** கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்களும் திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளன. இவற்றின் சந்தை மதிப்பு சுமார் **ரூ.2420.12** கோடியாகும். இவற்றில் **2015–2016–**ஆம் ஆண்டில் மட்டும் **90.58** ஏக்கர் விளைநிலங்கள் **11.2207** கிரவுண்டு மனை மற்றும்

**15.0936** கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்கள் சுவாதீனம் பெறப்பட்டன. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.**82.57** கோடி ஆகும்.

**கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்**

**46.** இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான காலிமனைகளை குடியிருப்புக்காக கூட்டாக ஆக்கிரமித்து **30** ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களை கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

i. **30** ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் நிலம் பயன்படுத்தி இருக்க வேண்டும்.
ii. அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
iii. வாடகை நிர்ணயம் **1.7.1998** ஆம் நாள் முதல் செயல்படுத்த வேண்டும்.
iv. வாடகை நிலுவைத் தொகை **12** மாதங்களில் சம தவணைகளில் செலுத்திட வேண்டும்.
v. பத்து மாத வாடகை நன்கொடையாக வழங்கிட வேண்டும்.

47. கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு இடங்களில் **298.64** ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்த **6066** ஆக்கிரமிப்பாளர்கள் வாடகைதாரர்களாக வரன்முறை

செய்யப்பட்டனர். அவர்களது குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, மின் இணைப்பு வசதி போன்றவற்றிற்கு தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டன.

## III - சிறப்புத் திட்டங்கள்

**அன்னதானத் திட்டம்**

48. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது உன்னதத் திட்டமான ‘‘அன்னதானத் திட்டம்’’

‘‘மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’’

என்ற மணிமேகலைக் காப்பிய வரிகளுக்கு ஏற்ப **2002**–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **23** ஆம் நாள் சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

49. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது முந்தைய ஆட்சிக் காலத்தில் அருள் வேண்டி வரும் இறையன்பர்களுக்கு இறையருளோடு அன்னமும் வழங்கும் உன்னதத் திட்டம் படிப்படியாக **360** திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. **2006 – 2011**–ஆம் ஆண்டுகளில்

இரண்டு திருக்கோயில்களுக்கு மட்டுமே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

**50. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி **2011–2012**–ஆம் ஆண்டில் **106** திருக்கோயில்களுக்கும், **2012–2013**–ஆம் ஆண்டில் **50** திருக்கோயில்களுக்கும், **2013–2014** ஆம் ஆண்டில் **100** திருக்கோயில்களுக்கும், **2014–2015** ஆம் ஆண்டில் **106** திருக்கோயில்களுக்கும் பக்தர்களின் வருகையையும் தேவையையும் கருத்திற்கொண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் **722** திருக்கோயில்களில் நாளொன்றுக்கு **56310** பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.**10.89** இலட்சம் செலவிடப்படுகிறது.

**நாள் முழுவதும் அன்னதானம்**

**51.** கடந்த **13.09.2012** அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்கரங்களால் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அன்றே பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி

திருக்கோயிலிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு **7765** பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.**1.72** இலட்சம் செலவிடப்படுகின்றது. பக்தர்கள் காலை எட்டு மணி முதல் இரவு பத்து மணி வரை எப்பொழுது வேண்டுமானாலும் உணவு அருந்தலாம். இத்திட்டம் பக்தர்களின் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

**52.** அன்னதான திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு ரூ.**12.61** இலட்சம் செலவில் **724** திருக்கோயில்களில் **64075** பக்தர்கள் பயன் பெறுகின்றனர். இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டில் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி மேலும் **30** திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது.

**ஆன்மீக மற்றும் ஒழுக்கநெறி வகுப்பு**

**53.** பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நற்பண்புகள், நீதிநெறி கருத்துக்களைக் கதைகள் வாயிலாகக் குழந்தைகளின் மனதில் ஆழப்பதித்திட, சனிக்கிழமைதோறும் ஆன்மீக மற்றும் நீதிநெறி வகுப்புகளைத் தெரிவுசெய்யப்பட்ட திருக்கோயில்களில் நடத்த **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியருக்கு இனிப்பு, கார வகைகள் வழங்கப்பட்டு வருவதோடு சிறந்த மாணவ மாணவியருக்குப் பரிசுகளும் அளிக்கப்படுகின்றன.

ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகளில் **2015–2016–**ஆம் ஆண்டு **485** திருக்கோயில்களில் நடத்தப்பட்டதில் **32396** மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

**சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்**

**54.** ஆண்டுதோறும் முக்கிய திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத் தாழ்வின்றி பங்கு பெறும் வகையில், சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடத்தப்படுகின்றன. சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் **2015–2016–**ஆம் ஆண்டு **767** திருக்கோயில்களில் சிறப்புடன் நடத்தப்பட்டன.

**யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம்**

**55.** **“மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான்”** என்ற **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது

உயரிய எண்ணத்தின்படி யானைகளின் உடல் நலமும் மன நலமும் பேண அவற்றின் உடல் நலனுக்கேற்ற குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் “ யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்” நடத்தப்பட்டு வருகிறது. **2003, 2004, 2005** ஆம் ஆண்டுகளில் திருக்கோயில்கள் மற்றும் தனியாரால் பேணப்பட்ட யானைகளுக்கு குளிர்ந்த இயற்கை சூழ்நிலையில் முதுமலை தெப்பக்காடு பகுதியில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டது. **2006** ஆம் ஆண்டு முதல் **2011** ஆம் ஆண்டு வரை கைவிடப்பட்ட இம்முகாம் **2011–2012** ஆம் நிதியாண்டில் மீண்டும் **14.12.2011** அன்று முதல் **48** நாட்கள் முதுமலை தெப்பக்காடு பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

**2012–2013**–ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகில் பவானி ஆற்றங்கரையில் இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சேர்ந்த **34** யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத் திருக்கோயிலைச் சேர்ந்த ஒரு யானையும், பங்கேற்று பயனடைந்தன.

**2013–2014**–ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச்

சொந்தமான 31 யானைகளும், வனத்துறையை சேர்ந்த 18 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும், நாகூர் தர்காவிற்கு சொந்தமான 1 யானையும் ஆக மொத்தம் 52 யானைகள் பங்கேற்று பயனடைந்தன.

2014–2015–ஆம் ஆண்டில் நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 28 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்தன.

2015–2016–ஆம் ஆண்டில் நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 29 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்தன. இம்முகாமில் பங்கேற்க இயலாத திருக்கோயில் மற்றும் திருமடங்களைச் சேர்ந்த யானைகளுக்கு முகாமில் வழங்கப்பட்டது போலவே ஊட்டச் சத்துணவுகளும், மருந்துகளும் வழங்கி அவற்றின் மன நலமும் உடல் நலமும் பேணப்பட்டன. இம்முகாமில் யானைகளுக்கு மட்டுமின்றி யானைப்பாகர்களுக்கும் அவர்கள் உடல்நலம் பேண மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மேலும், யானைகள் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து அறியவும் யானைப்பாகர்களுக்கு பயிற்சி

அளிக்கப்பட்டது. இந்த முகாமிற்கு ஆன முழுச் செலவினத்தையும் அரசே ஏற்றுக்கொண்டது.

**ஏழை எளியோருக்குத் திருமணம்**

**56. 1981** ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில் உபரிநிதியிலிருந்து திருமணம் செய்து வைக்க இத்திருமணத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பயன்பெற்றனர். **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தலைமையேற்று **2002**–ஆம் ஆண்டு **1008** இணைகளுக்கும், **2003**–ஆம் ஆண்டு **1053** இணைகளுக்கும் திருமணங்கள் திருவேற்காட்டில் நடத்தி வைத்தார்கள். மேலும், **489** இணைகளுக்குச் சில திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்பட்டன. **2006–2011**ஆம் ஆண்டுகளில் கைவிடப்பட்ட இந்த உயரிய திட்டத்தை **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி சிறப்புடன் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு **2012–2013** ஆம் ஆண்டில் ஒரு இணைக்கு

நான்கு கிராம் தங்க திருமாங்கல்யம் மற்றும் ரூபாய் பத்தாயிரம் செலவில் சீர்வரிசைப் பொருட்கள் என்ற விகிதத்தில் **1006** இணைகளுக்குத் திருமணம் **18.06.2012** அன்று திருவேற்காடு திருக்கோயில் அருகில் ரூ.**1.51** கோடி செலவில் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது.

**கம்பிவட ஊர்திகள்**

**57.** பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்காக முதல் முறையாக நான்கு கோடி ரூபாய் செலவில் கம்பி வட ஊர்தி அமைத்திட **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டு **2004–**ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் கம்பிவட ஊர்தி சேவை தொடங்கப்பட்டது. இந்தக் கம்பிவட ஊர்தி பக்தர்களின் வரவேற்பு பெற்றதையடுத்து, பழனி திருக்கோயிலுக்கு **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி சர்வதேசத் தரத்தில் மேலும் ஒரு கம்பி வட ஊர்தி அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் மற்றும் கரூர் மாவட்டம் அய்யர்மலை அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றுக்கு புதிதாக

கம்பிவட ஊர்தி அமைத்திட ஒப்பந்தம் ஏற்படுத்தி நடவடிக்கையிலுள்ளது.

**மின்கல மகிழுந்து**

**58.** ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு **2011**–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் **19**–ஆம் நாள் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆறு இருக்கைகள் கொண்ட மின்கல மகிழுந்து ஒன்றினை மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள். **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி பின்வரும் பத்து திருக்கோயில்களில் மின்கல மகிழுந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பக்தர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

| வ. எண். | திருக்கோயில் பெயர் | மகிழுந்து எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் | 2 |
| 2. | பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் | 3 |

| | | |
|---|---|---|
| 3. | திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | 1 |
| 4. | திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | 1 |
| 5. | திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் | 1 |
| 6. | திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் | 1 |
| 7. | திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் | 1 |
| 8. | திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் | 1 |
| 9. | மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் | 1 |
| 10. | இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் | **3** |
| | **கூடுதல்** | **15** |

**கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம்**

**59.** கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் **490,** ஒரு பெண்கள் கல்லூரி, ஒரு மேல்நிலைப்பள்ளி, இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றைச் செம்மையாக நிருவகிக்க போதுமான நிதிவசதி இல்லை என்பதை அறிந்து, செம்மையான நிருவாகத்தை மேற்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்ததை **2013–2014**ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாயாக உயர்வு செய்து **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டது.

**ஒரு கால பூஜைத் திட்டம்**

**60.** நிதி வசதியற்று ஒரு கால பூஜை கூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை செய்திட உதவும் வகையில் இத்திட்டம் **1986–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சிறப்புமிகு திட்டத்தில் பொதுமக்களும் பங்கேற்கும் நோக்கில் **1993–**ஆம் ஆண்டு **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், திருக்கோயில் ஒன்றுக்கு பொதுமக்கள் நன்கொடையாக

ரூ.2,500/– வழங்க முன்வந்தால் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/– மும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/–ம் ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/–ம் ஆக மொத்தம் ரூ.25,000/– அந்தந்த திருக்கோயில் பெயரில் முதலீடு செய்யப்படும் என ஆணையிட்டார்கள்.

61. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ல் பொறுப்பேற்றபின் ரூ.25,000/– முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகை போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில்கொண்டு, நிரந்தர முதலீட்டுத்தொகையை ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்கீழ், 11,931 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதற்கு ஒருமுறை வழங்கும் அரசு மான்யமாக ரூ.59.48 கோடி வழங்கப்பட்டது. எஞ்சிய தொகை ரூ.30 கோடி, நிதிவசதிமிக்க திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் மேலும் 68 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 11,999 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் செயல்படுத்தப்பட்டது.

62. 2014–2015–ஆம் ஆண்டு மேலும் 505 திருக்கோயில்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் ரூ.3.79 கோடி

ஒதுக்கீடு செய்யப்பட்டு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் ஒரு திருக்கோயிலுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வைப்பு நிதி வீதம் தற்போது ரூ.125.04 கோடி முதலீட்டில் 12,504 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை சிறந்த முறையில் நடைமுறையில் உள்ளது.

**63.** ஒருகால பூஜை கூட நடைபெறாத எந்தவொரு திருக்கோயிலுக்கேனும் ரூ.10,000/– நன்கொடை எவரேனும் அளித்தால், இத்துறை மூலம் ரூ.90,000/– நிதி அளித்து மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் அத்திருக்கோயில் பெயரில் வைப்பு நிதி உருவாக்கி ஒருகால பூஜை நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

**சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம்**

**64. 10,000** சிறு திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.2.44 கோடி செலவில் வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கு நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதி மூலம் பூம்புகார் கைவினை பொருள் நிறுவனத்திற்கு பூஜை உபகரணங்கள் தயார் செய்து

வழங்க உத்தரவு வழங்கப்பட்டு பூஜை உபகரணங்கள் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் **15.09.2015** அன்று சிறுசிறு திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டது.

**பழமையான திருக்கோயில்களின் கால பூஜைகளைப் புத்துயிரூட்டல்**

**65.** பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பழம்பெரும் திருக்கோயில்களில் கால பூஜைகள் செய்வதில் தொய்வு ஏற்பட்டதைக் களைவதற்கு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான கால பூஜைகளைச் செய்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதன் பயனாக **19** நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து **50** நலிவுற்ற திருக்கோயில்களுக்கு **2001–2006** ஆம் ஆண்டு நிதியுதவி செய்யப்பட்டது. **2006–2011–ல்** செயலற்று இருந்த இத்திட்டத்திற்கு **2011–ல்** பொறுப்பேற்றபின் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் புத்துயிர் அளிக்கப்பட்டு **18** திருக்கோயில்களுக்கு **ரூ.4.49** இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் பல திருக்கோயில்களைப் பயன்பெறச் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## IV - திருப்பணி

**திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்)**

**66.** வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த திருக்கோயில்களையும் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் பாடிப் புகழப்பட்ட திருக்கோயில்களையும் பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களையும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள், ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளிலுள்ள சிறு சிறு திருக்கோயில்கள் ஆகியவற்றையும் ‘‘திருக்கோயில் பொருத்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார்’’ – என்ற முதுமொழிக்கேற்ப திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்து பேணிப் பாதுகாத்திட **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**திருப்பணி நிதி**

**67.** பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவற்றின் விவரம்  பின்வருமாறு:

- பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை
- திருக்கோயில்களின் சொந்த நிதி
- நிதிமாற்ற நிதி
- அரசு மானியம்
- பொதுநல நிதி
- ஆலய மேம்பாட்டு நிதி
- கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
- உபயத் திருப்பணி
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கான திருப்பணி நிதி
- நிதி ஆணைய மானியம்

**68.** நன்கொடையாளர்கள் திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு முன்வரும் நிகழ்வுகளில் அவர்களால் வழங்கப்படும் நிதியாதாரம் பற்றாத சூழ்நிலை ஏற்படும்போது இத்துறை மூலமாகவும் கூடுதல் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**நன்கொடை**

**69.** இறை நம்பிக்கை, ஆன்மீகம் மற்றும் சமய ஈடுபாடு கொண்டோர், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோர் மனமுவந்து அளிக்கும் நன்கொடையைக் கொண்டும் திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) நடைபெறுகின்றன. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் **567** திருக்கோயில்களில் ரூ.**34.13** கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நன்கொடை மூலம் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் **2015–2016** ஆம் நிதியாண்டில் மட்டும் **39** திருக்கோயில்களில் **40** திருப்பணிகளுக்கு ரூ.**2.69** கோடி மதிப்பீட்டில் திருப்பணி செய்ய இசைவளிக்கப்பட்டது.

**திருக்கோயில் நிதி**

**70.** நிதி மிகுந்த திருக்கோயில்களின் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) அவற்றின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் **821** திருக்கோயில்களில் ரூ.**249.16** கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் திருக்கோயில் நிதி மூலம் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் **2015 – 2016** ஆம் நிதியாண்டில்

மட்டும் **142** திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.**53.04** கோடிக்கு இசைவளிக்கப்பட்டது.

**நிதிமாற்றம்**

**71.** நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதி தேவையான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளை மேற்கொள்ள இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் **36**–வது பிரிவின் கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் **133** திருக்கோயில்களில் ரூ.**16.57** கோடி மதிப்பீட்டில் பிற திருக்கோயில்களிலிருந்து நிதிமாற்றம் மூலம் திருப்பணிகள் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் **2015–2016** ஆம் ஆண்டு மட்டும் **21** திருக்கோயில்களுக்கு ரூ.**2.64** கோடி நிதி மாற்றம் மூலமாக திருப்பணிகளுக்கு இசைவளிக்கப்பட்டது.

**அரசு மானியம்**

**72.** அரசு மானியமாக ஆண்டுதோறும் திருக்கோயில்களின் திருப்பணிக்கென (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) மூன்று கோடி ரூபாய் வழங்கப்பட்டது. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் **2011** ஆம் ஆண்டு பொறுப்பேற்றபின், **2011–2012** மற்றும் **2012–2013**ஆம் ஆண்டுகளில் **96** திருக்கோயில்களில் புனரமைப்பு / புத்தாக்கத்திற்கென ஆறு கோடி ரூபாய்

வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் வழங்கப்படும் மூன்று கோடி ரூபாய் அரசு மானியத்தை **2013–2014** ஆம் நிதியாண்டு முதல் ஆறு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி மேற்குறிப்பிட்ட நான்காண்டுகளில் **196** திருக்கோயில்களின் சீரமைப்புப் பணிக்கு ரூ.**18** கோடி நிதி வழங்கப்பட்டது.

**இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி**

**73.** ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த அரசு மானியத்திற்கு பதிலாக, **2014–2015** ஆம் ஆண்டில் மகாமகம் தொடர்புடைய **36** திருக்கோயில்களுக்கு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதியிலிருந்து ரூ.**6** கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

**பொதுநல நிதி**

**74.** ஆணையரின் பதவிப்பெயரில் "பொது நல நிதி" என்ற நிதியம் தனி நபர்கள் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடை மற்றும் இந்து சமய நிறுவனங்களின் பங்களிப்பு தொகை ஆகியவற்றைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் **794** திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல்

மற்றும் புத்தாக்கம்) ரூ.60.39 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் பொதுநல நிதி மூலம் செய்ய இசைவளிக்கப்பட்டது.

**ஆலய மேம்பாட்டு நிதி**

**75.** நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக எட்டு கோடி ரூபாய் பெற்று மூல நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூல நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 48 திருக்கோயில்களுக்கு ரூ.5.36 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. இதில் 2015–2016 ஆம் ஆண்டில் மட்டும் 41 திருக்கோயில்களுக்கு ரூ.4.51 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

**76.** இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிக்கு நிதியுதவி வழங்கிட ‘‘கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டம்’’ என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து

இரண்டு கோடி ரூபாய் நிதிமாற்றம் செய்து மூல நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூல நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் வழங்கப்பட்டதை 2012–13 ஆண்டில் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/– என உயர்த்தி, **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி சென்ற நான்கு ஆண்டுகளில் 3272 திருக்கோயில்களுக்கு ரூ.16.36 கோடி வழங்கப்பட்டது. இதில் 2015–2016–ஆம் ஆண்டு மட்டும் 1004 திருக்கோயில்களுக்கு ரூ.5.02 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

நடப்பு நிதி ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புக்கு வழங்கப்படும் நிதியுதவியை திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/–லிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் 2016–2017–ஆம் நிதியாண்டில் 500 கிராமப்புறத் திருக்கோயில்களில் ஐந்து கோடி ரூபாய் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி**

77. ‘‘முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி’’ என்ற நிதியத்தினை **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் **1991**–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஐந்தாம் நாள் உருவாக்கினார். இந்நிதி அமைப்புக்குத் தமது சொந்த பணத்திலிருந்து ரூ.1,00,008/–ஐ நன்கொடையாக **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் அளித்தார்கள். இந்நிதிக்கு தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதியமைப்பு ‘‘திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி’’ என்று தற்போது அழைக்கப்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் 17 திருக்கோயில்களுக்கு ரூ1.59 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

**உபயத் திருப்பணி**

78. பக்தர்கள் தாமே முன்வந்து தனது சொந்த செலவிலும், துறை மேற்பார்வையிலும் திருக்கோயில்களுக்குத் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்வது வழக்கத்திலுள்ளது. இவர்களது உபயத் திருப்பணி, துறையின் கண்காணிப்புடன்

ஊக்குவிக்கப்படுகிறது. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது **2011–2016** கால ஆட்சியில் **315** திருக்கோயில்களில் ரூ.**80.13** கோடி மதிப்பீட்டில் உபயத்திருப்பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் **2015–2016** ஆம் ஆண்டில் **63** திருக்கோயில்களில் **90** உபயத் திருப்பணிகளுக்கு ரூ.**28.54** கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி**

**79.** இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.**25,000/–** வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது. **2011–2012**–ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற இத்தொகை போதுமானதாக இல்லை என்பதறிந்து **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.**50,000/–** என உயர்வு செய்யப்பட்டது. இதன் மூலமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் **3640** திருக்கோயில்களுக்கு ரூ.**18.20** கோடி நிதியுதவி

வழங்கப்பட்டது. இதில் **2015–2016** ஆம் ஆண்டு மட்டும் **1004** திருக்கோயில்கள் புனரமைப்புக்கு ரூ.**5.02** கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

நடப்பு நிதி ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களின் புனரமைப்புக்கு வழங்கப்படும் நிதியுதவியை திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.**50,000/–** லிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் **2016–17**–ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள **500** திருக்கோயில்களில் ஐந்து கோடி ரூபாய் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**நிதி ஆணைய மானியம்**

**80.** தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாமல் புதுப்பிக்க மத்திய நிதி ஆணையம் நிதியுதவி வழங்குகின்றது. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் **13**–வது நிதி ஆணைய நிதி மூலமாக **2011–2012**–ஆம் ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு

ரூ.22.50 கோடி வீதம் நான்கு ஆண்டுகளுக்கு தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் திருப்பணிக்கென ரூ.90 கோடி, 250 திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்டது. இதில் 2014–2015–ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ரூ.22.50 கோடி நிதி மூலம் 67 திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது.

**சுற்றுலாத்துறை நிதி**

81. தமிழகத் திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்புத்தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறை, குளியலறைகள், குடிநீர்வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள், வாகன நிறுத்துமிடங்கள், புல்வெளி அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத்துறையும், அறநிலையத்துறையும் இணைந்து செயல்படுகின்றன. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 16 திருக்கோயில்களுக்கு ரூ.7.86 கோடி சுற்றுலாத்துறை நிதியுதவி வழங்கப்பட்டது.

**பழமைவாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி – தொல்லியல் வல்லுநர் குழு**

**82.** தமிழக அரசின் உத்தரவின்படி **13–**வது நிதி ஆணையத்தின் நிதி உதவியுடன் திருப்பணி நடைபெற்று வரும் திருக்கோயில்களின் புனரமைப்பு, தொன்மையைப் பாதுகாத்தல் மற்றும் புதுப்பித்தல் பணிக்கு தொன்மை சார்ந்த ஆலோசனை வழங்க மத்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற தொல்லியல் வல்லுநர், திரு.கே.டி.நரசிம்மன் பணியமர்த்தப்பட்டார். மேலும், தொல்லியல் தொடர்பான விஷயங்களில் அறிவுரை வழங்க குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட தொல்லியல் வல்லுநர் குழு அல்லது குழுவின் உறுப்பினர் அறிவுரைப்படி தொன்மைமிக்க திருக்கோயில்களை பாதுகாத்தல், மரபுமாறாது புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்குழு அமைக்கப்பட்ட பிறகு குழு உறுப்பினர்களால் ஆய்வு செய்யப்பட்டு **323** ஆய்வறிக்கைகள் பெறப்பட்டன. சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், மற்றும் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் தொல்லியல் துறை

ஆய்வறிக்கைகளின்படி திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதே போல் ஆய்வுக் குறிப்புகள் அடிப்படையில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் உள்ளிட்ட திருக்கோயில்களில் புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**83.** குழு வழிகாட்டுதலின்படி துறையினால் எடுக்கப்பட்ட பழமை மாறாத புனரமைப்பு பணிகளை சிறந்த நடைமுறைகள் எனப் பாராட்டி **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் **2015** ஆம் ஆண்டுக்கான அரசு துறைகளில் சிறந்த துறைக்கான நல் ஆளுமை விருது வழங்கப்பட்டது. மேற்படி விருது, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் தொல்லியல் மரபுகளிலிருந்து சற்றும் பிறழாமல் பாதுகாத்து புனரமைக்கப்பட்டதற்காக வழங்கப்பட்டது.

**பழமையான ஓவியங்களை பழமை மாறாது புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் – சிறப்பாக சுவரோவியங்கள்**

**84. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி **110–**ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி, இந்து சமய அறநிலையத்துறையின்

கட்டுப்பாட்டில் உள்ள 50 திருக்கோயில்களின் பழமையான ஓவியங்களை சிறப்பாக சுவரோவியங்களை பழமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்க மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவின் அறிவுரையின்படி கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் ரூ.81 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன. இதே போல் இக்குழுவின் அறிவுரையைப் பெற்று திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர ரூ.64.10 லட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம், அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலில் சுவரோவியங்கள் பழமை மாறாது புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

85. முதன்முதலாக சிமெண்ட் பூச்சின் கீழ் நாயக்கர் காலத்து சுவரோவியம் சென்னை அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் புனரமைப்புப் பணியின்போது மே 2015–ல் கண்டுபிடிக்கப்பட்டது. சோழர் காலத்து கல்வெட்டு ஒன்றும் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் புதியதாக

கண்டுபிடிக்கப்பட்டு அதன் வாசகங்கள் வெளிப்பிரகாரத்தில் புதிய கல்லின்மீது நிகழ்கால தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**திருக்குளங்களை புதுப்பித்து திருப்பணி செய்தலும், மழைநீர் சேகரிப்பும்**

**86.** இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில் **1586** திருக்கோயில்களுக்கு **2359** திருக்குளங்கள் உள்ளன. இவைகளில் **1068** திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. **2011** முதல் **2016** வரை **611** திருக்குளங்கள் ரூ.**3.31** கோடி செலவில் புனரமைப்பு செய்யப்பட்டன. எஞ்சிய திருக்குளங்களின் சீரமைப்பு விரைந்து முடிக்கப்படும். இதுதவிர, கடந்த இரண்டு ஆண்டுகளில் **11** திருக்குளங்களைச் சீரமைக்க ரூ.**3.76** கோடி நிதியுதவி சுற்றுச்சூழல் துறையால் வழங்கப்பட்டது. **2015–2016** ஆம் ஆண்டில் மட்டும் ஐந்து திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டன. மழை நீர் சேகரிப்புச் செயலாக்கத் திட்டத்தின் கீழ், **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி **2014** ஆம் ஆண்டு மே–ஜூன் மாதங்களில் **5400** மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் **1004** திருக்குளங்களில் மழைநீர் சேகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

**87.** திருக்குளங்களைப் பாதுகாத்துப் பேண இத்திட்டத்தின்படி கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- திருக்குளங்களின் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- திருக்குளங்களைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல்.
- தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்
- திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கு வழி ஏற்படுத்துதல் மற்றும் உபரி நீர் வெளியேற்றுதல்.

**திருப்பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க தனி மென்பொருள்**

**88.** திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும் திருப்பணிகள் தொடர்பாக பெறப்படும் மதிப்பீடுகளுக்கு துறைத்தலைவர் மற்றும் சார்நிலை அலுவலர்கள் நிலையில் வழங்கப்படும் நிருவாக அனுமதி, தொழில் நுட்ப அங்கீகாரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் விவரங்கள், ஒப்பந்ததாரர் விபரம், பணி ஆணை வழங்கப்பட்ட விவரம், பணி துவங்கப்பட்ட விவரம், பணி நடைபெற்று வரும் விவரம், புகைப்படத்துடன் பணி முன்னேற்ற விவரம் அடங்கிய விவரங்கள் பதிவேற்றம் செய்யத்தக்க வகையில் திருக்கோயில் திருப்பணிகளை

கண்காணிக்க கணினி மென்பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**பட்டயப் பொறியாளர்கள்**

**89.** திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப்பணித்துறையிலும் நெடுஞ்சாலைத்துறையிலும் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கடந்த ஐந்து ஆண்டுகளில் **13** பட்டயப்பொறியாளர்கள் அங்கீரிகரிக்கப்பட்டுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் பொறியாளர்கள் மூலமாக திருக்கோயில்களைச் சீரமைப்பதற்குரிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்யவும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஸ்தபதிகள்**

**90.** சிற்ப சாத்திர மற்றும் ஆகம சாத்திர விதிகளில் வரையறுக்கப்பட்டபடி திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர் மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்தோர், சிற்ப சாத்திரக்கலையில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றுள்ளோர்

ஆகியோர் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்யப்படுகின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் **539** ஸ்தபதிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**குடமுழுக்கு (கும்பாபிஷேகம்/சம்ப்ரோக்ஷணம்)**

**91.** பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் ஆகம விதிப்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் திருக்கோயில்கள் கீழ்க்கண்டவாறு வகை செய்யப்பட்டு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்படுகின்றன.

- ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடப் பெற்ற பழமை வாய்ந்த திருக்கோயில்கள்.
- வரலாற்றுப் புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- கிராமப்புறங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள்.

92. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் (31.3.2016 வரை) 8843 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. இவற்றில் 2015–2016 ஆம் ஆண்டு மட்டும் 1516 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டது. இது திருப்பணி வரலாற்றில் ஒரு மைல் கல்.

**திருத்தேர் பராமரிப்பு**

93. இத்துறையின் கீழுள்ள திருக்கோயில்களில் 809 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 989 மரத் திருத்தேர்கள் உள்ளன. 2006–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதி மூலம் திருத்தேர்கள் திருப்பணிக்காக (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.10.50 கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் 158 திருத்தேர்களின் திருப்பணிக்கு ரூ.9.54 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது. இதில் 2015–2016 ஆம் ஆண்டில் 30 திருத்தேர்களுக்கு ரூ.2.04 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

94. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா 2011ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடன், திருத்தேர் திருப்பணியில் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்)

ஏற்பட்டிருந்த இடர்பாடுகளை அறிந்து மரத்தேர் சிற்பிகளின் ஊதியத்தை உயர்த்தியும், மரங்களுக்கு உரிய விலையை நிர்ணயித்தும் ஆணையிட்டார். இதன் பயனாக **143** திருத்தேர்களுக்கு சீரமைப்பு பணிகள் ரூ.**15.91** கோடி மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டு, திருத்தேரோட்டங்கள் நடைபெற்றன. இதில் **2015–16** ஆம் நிதியாண்டில் மட்டும் **8** திருத்தேர்கள் ரூ.**3.62** கோடியில் சீரமைக்கப்பட்டுள்ளன.

**95.** திருத்தேர்களைப் பாதுகாக்கும் பொருட்டு தீப்பிடிக்காத தகடுகளால் ஆன தேர்கொட்டகை, இரும்பு அச்சு, இரும்புச் சக்கரம் ஆகியவற்றைச் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத் தவிர தேரோட்ட விழாவின்போது விபத்துகள் நடைபெறாதிருக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. திருத்தேர்களுக்கும், திருத்தேரோட்டத்தில் தேரை இழுப்பவர்களுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக காப்பீடு செய்யப்படுகிறது.

**தங்கரதம் மற்றும் வெள்ளிரதம்**

**96.** திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்கரதத்திலோ,

வெள்ளிரதத்திலோ எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது.

**97.** தற்போது கீழ்க்காணும் **55** திருக்கோயில்களில் தங்கரதமும் **42** திருக்கோயில்களில் வெள்ளிரதமும் பயன்பாட்டில் உள்ளன.

**தங்கரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி |
| 2. | அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை |
| 3. | அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 5. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |
| 6. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை |
| 7. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில் |
| 8. | அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர் |

| | |
|---|---|
| 9. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி |
| 10. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |
| 11. | அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில் |
| 12. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| 13. | அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி |
| 14. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 15. | அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை |
| 17. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர் |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு |
| 19. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் |
| 20. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர் |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை |
| 22. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி |

| | |
|---|---|
| 23. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 24. | அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை |
| 25. | அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு |
| 26. | அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை |
| 27. | அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி |
| 28. | அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை |
| 29. | அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம் |
| 30. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் |
| 31. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர் |
| 32. | அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 33. | அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர் |
| 34. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜெம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல் |
| 35. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல் |

| | |
|---|---|
| 36. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம் |
| 37. | அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி |
| 38. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 39. | அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை |
| 40. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல் |
| 41. | அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி |
| 42. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம் |
| 43. | அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில், சேலம் |
| 44. | அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை |
| 45. | அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர் |
| 46. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் |
| 47. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் |
| 48. | அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம் மாவட்டம் |

| | |
|---|---|
| 49. | அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு மாவட்டம் |
| 50. | அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம் மாவட்டம். |
| 51. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 52. | அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி, திருநெல்வேலி மாவட்டம் |
| 53. | அருள்மிகு ஆண்டாள் (நாச்சியார்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 54. | அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை மாவட்டம் |
| 55. | அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம் மாவட்டம்<br>(தங்கமுலாம் பூசப்பட்ட தேர்) |

**வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| 3. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |

| | |
|---|---|
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 5. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 7. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை |
| 8. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 9. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர் |
| 10. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில் |
| 11. | அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி |
| 12. | அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை |
| 13. | அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி |
| 14. | அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை |
| 15. | அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |

| | |
|---|---|
| 16. | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர் |
| 17. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 19. | அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை |
| 20. | அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குன்றக்குடி |
| 22. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்செவல்பட்டி |
| 23. | அருள்மிகு கண்ணுடையநாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை |
| 24. | அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி |
| 25. | அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவக்கோட்டை |
| 26. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம் |
| 27. | அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு |

| | |
|---|---|
| 28. | அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி |
| 29. | அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில், பவானி |
| 30. | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆயக்குடி, திருநெல்வேலி |
| 31. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர் |
| 32. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி |
| 33. | அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம் மாவட்டம் |
| 34. | அருள்மிகு சௌந்திரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல் |
| 35. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம் |
| 36. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம் மாவட்டம். |
| 37. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர் மாவட்டம் |
| 38. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 39. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்கசாலை, சென்னை |

| | |
|---|---|
| 40. | அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 41. | அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோயில், விராலிமலை, புதுக்கோட்டை |
| 42. | அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம் , திருவண்ணாமலை மாவட்டம் |

## V - பக்தர்கள் நலன்

### அடிப்படை வசதிகள்

### குடிநீர்வசதி

**98.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் **145** திருக்கோயில்களில் சுத்தமான குடிநீர் வழங்க ரூ.**3.70** கோடி செலவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

### நவீனக் கழிப்பிட வசதி

**99.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் ஆடவர்க்கும் மகளிர்க்கும் தனித்தனியாக நவீன கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2011–2016**–ல் **126** திருக்கோயில்களில் ரூ.**16.07** கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் **2015–2016** ஆம் ஆண்டு மட்டும்

19 திருக்கோயில்களில் ரூ.5.49 கோடி செலவில் ஆடவர் மற்றும் மகளிர்க்கு தனித்தனி கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

**தங்கும் வசதி**

**100.** திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக முக்கிய திருக்கோயில்களில் குடில்கள், தங்கும் அறைகள், துயில் கூடங்கள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 15 திருக்கோயில்களில் ரூ.59.41 கோடி மதிப்பீட்டில் நவீன தங்கும் கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டு மூன்று திருக்கோயில்களுக்கு ரூ1.50 கோடி மதிப்பீட்டில் தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிதி பங்களிப்புடன் ரூ.47.09 கோடி மதிப்பீட்டில் ஒரே நேரத்தில் சுமார் 1000 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக குடில்கள், அறைகள், துயில் கூடங்கள், உணவகம் போன்ற வசதிகளுடன் கூடிய ‘‘யாத்ரி நிவாஸ்’’ ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்டு **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்கரங்களால் 30.06.2014 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. 500 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக

திருவண்ணாமலை திருக்கோயிலில் ரூ.28 கோடி மதிப்பீட்டிலும் இராமேஸ்வரம் திருக்கோயிலில் ரூ.29 கோடி மதிப்பீட்டிலும் ‘யாத்ரி நிவாஸ்’ பொதுப்பணித்துறை மூலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் வழிகாட்டி / தகவல் பலகைகள்**

**101.** திருக்கோயில்களை எளிதில் சென்றடைவதற்கு ஏதுவாக முக்கிய சாலைகளில் திருக்கோயில் பெயருடன் கூடிய வழிகாட்டி பலகைகளும், அந்தந்த பகுதியில் அமைந்துள்ள அனைத்து திருக்கோயில்கள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள ஏதுவாக ரயில் மற்றும் பேருந்து நிலையங்களில் தகவல் பலகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**பக்தர்களுக்கு தரமான குங்குமம் வழங்குதல்**

**102.** மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன இயந்திரங்கள் மூலம் தரமான குங்குமம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.

**நன்கொடையாளர் வரவேற்பு மையங்கள்**

**103.** திருக்கோயில்களுக்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் வசதிக்காக நன்கொடையாளர் வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை, இந்து சமய அறநிலையத் துறை, ஆணையர் அலுவலகத்திலும் மற்றும் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஆகிய திருத்தலங்களிலும் நன்கொடையாளர் வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மானசரோவர், முக்திநாத் யாத்திரை**

**104.** தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மானசரோவர் மற்றும் முக்திநாத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதன் அவசியத்தை கருத்தில் கொண்ட **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் சீனாவில் உள்ள மானசரோவர் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒருமுறை ரூ.40,000/– வீதம் நிதியுதவியும், அது போன்று நேபாளத்திலுள்ள முக்திநாத் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒருமுறை ரூ.10,000/– வீதம் நிதியுதவியும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் வசிக்கும்

250 யாத்ரீகர்களுக்கு வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி 2012–2013ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த 146 யாத்ரீகர்களுக்கு ரூ.58.40 இலட்சம் நிதியுதவியும், முக்திநாத் பயணம் முடித்து வந்த 10 யாத்ரீகர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டிற்கு யாத்திரையை முடித்து வந்த பக்தர்களுக்கு ரூ.84.70 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில் பயணம் முடித்து வந்த யாத்ரீகர்களுக்கு ரூ.112.30 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டில் மானேசரோவர் பயணம் முடித்து வந்த 51 யாத்ரீகர்களுக்கு ரூ.20.40 இலட்சம், முக்திநாத் பயணம் முடித்து வந்த 72 யாத்ரீகர்களுக்கு ரூ.7.20 இலட்சம் ஆக மொத்தம் ரூ.27.60 இலட்சம் வழங்கப்பட்டது.

**புடவை / வேட்டி வழங்குதல்**

**105.** முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு, சுதந்திர நாளன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும் முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் பருத்திநூல் புடவை மற்றும் வேட்டிகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 59870 பயனாளிகளுக்கு புடவை, வேட்டிகள் வழங்கப்பட்டன.

# VI - திருக்கோயில்கள் தூய்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

**உழவாரப் பணி**

**106.** பாரம்பரியமிக்க வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கோயில்கள், வானளாவிய கோபுரங்களையும் அழகிய விமானங்களையும் மண்டபங்களையும் பெரிய மதிற்சுவர்களையும் உள்ளடக்கி உள்ளன. இவற்றை பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். இக்கட்டுமானங்களில் செடிகளும், கொடிகளும், மரங்களும் முளைத்து கட்டுமானங்களுக்குப் பெரும் சேதம் விளைவிக்கின்றன.

சமயக் குரவர்களில் ஒருவரான அப்பரடிகள் தொடங்கிச் செய்த உழவாரப் பணிக்கு புத்துயிர் அளித்திடும் வகையில் 2011–2012 ஆம் ஆண்டில் உழவாரப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு தற்போது வரை 2892 திருக்கோயில்களில் உழவாரப் பணி செய்யப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டில் 454 திருக்கோயில்களில் உழவாரப் பணி செய்து செடி, கொடி மற்றும் மரங்கள் அகற்றப்பட்டன. இப்பணி திருக்கோயில்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப்பணி**

**107.** திருக்கோயில்களைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டிய அவசியம் கருதி தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பயனாக **110** பெரிய திருக்கோயில்கள் சிறந்த முறையில் தூய்மையாக பராமரிக்கப்படுகின்றன. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இதர திருக்கோயில்களிலும் இந்தத் திட்டத்தை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருக்கோயில் சுற்றுச்சூழல் காத்திட பிளாஸ்டிக் பயன்பாடு முற்றிலும் தவிர்த்தல்**

**108.** திருக்கோயில்களில் ஆரோக்கியமும் தூய்மையும் மிக்க சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்த்திட திருக்கோயில் வளாகங்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள அங்காடிகளில் அபிஷேக அர்ச்சனைப் பொருள்கள் மற்றும் பிரசாதப் பொருள்கள் ஆகியவை துணிப்பைகள், காகிதப்பைகள், மூங்கில் தட்டுகள், பாக்குமட்டைத் தட்டுகளில் வழங்கப்படுகின்றன.

**மாற்று மின்திட்டம்**

**109.** திருக்கோயில்களில் மின் செலவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், சூரிய சக்தி மூலம் மாற்று மின்திட்டம் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் 2012–2013–ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், சுசீந்திரம் அருள்மிகு கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 10 கிலோ வாட் திறன் கொண்ட மாற்று மின் திட்டத்தால், பெறப்படும் மின்கட்டணப் பட்டியலில் ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– வரை சேமிப்பு ஏற்படுகிறது.

## VII - பாதுகாப்பு

**உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் பாதுகாப்பு**

**110.** திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாத்திட களவு எச்சரிக்கை மணி, கோள் சொல் கடிகாரம், தொட்டிப் பூட்டு, இரும்பு வாயிற்கதவுகள், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் ஆகியன பொருத்துதல்,

இரவுக்காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகியன **4132** திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம்**

**111.** களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டத்தின் கீழ் ரூ.**5** கோடி மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாயிலிருந்து களவு எச்சரிக்கை மணி பொருத்துவதற்கு நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் **75** விழுக்காடு இத்துறையின் மூலம், எஞ்சிய **25** விழுக்காடு நன்கொடையாளர் பங்களிப்பு அல்லது திருக்கோயில் நிதி மூலம் என்ற அடிப்படையில் நிதியுதவி செய்திட இத்திட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டது. பெரும்பாலான திருக்கோயில்கள் கிராமப்புறங்களில் உள்ள நிதிவசதியற்ற திருக்கோயில்கள் என்பதையும் இத்திருக்கோயில்களில் விலை மதிப்புமிக்க உலோக விக்கிரகங்கள், நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் உள்ளதால் அவற்றைப் பாதுகாப்பது தலையாய கடமை என்பதையும் உணர்ந்து நிதிவசதியற்ற திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி பொருத்திட ஆகும் செலவினத் தொகை முழுவதையும் மேற்கண்ட மையநிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து

வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 562 திருக்கோயில்களுக்கு ரூ.71 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

**உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்**

**112.** திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் பொருட்டு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும் மீண்டும் இம்மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் பூஜைகள் செய்யப்படுகின்றன. உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள் விவரம் பின்வருமாறு:

**உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்**

| | |
|---|---|
| 1. | திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் வளாகம்) |

| | |
|---|---|
| 2. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி |
| 3. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 4. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம் |
| 5. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர் |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 7. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 8. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர் |
| 9. | அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் |
| 10. | அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர் |
| 11. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை |
| 12. | அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை |

| | |
|---|---|
| 13. | அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை |
| 14. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்) |
| 15. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 17. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான் கோட்டை, தர்மபுரி |
| 18. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம் |
| 19. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் |

மேலும் கீழ்க்கண்ட 15 மையங்களில், உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும் பொருட்டு **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகள் முடிந்துள்ளன.

## திருக்கோயில் பெயர் மற்றும் இடம்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர் |
| 2. | அருள்மிகு ஆலந்துறையார் மற்றும் கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர் |
| 3. | அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர் |
| 4. | அருள்மிகு நீலாயதாட்சியம்மன் உடனுறை காயாரோகணசுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 5. | இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையர் அலுவலக வளாகம் பின்புறம், தஞ்சாவூர் |
| 6. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல் |
| 7. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை |
| 8. | அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கட்ரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை |
| 9. | அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல் |
| 10. | அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி |
| 11. | திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணபுரம், பாளையங்கோட்டை |
| 12. | அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோயில் |

| | |
|---|---|
| 13. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம் வட்டம் |
| 14. | அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர் கிராமம், மயிலாடுதுறை வட்டம் |
| 15. | அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில், திருவலஞ்சுழி, கும்பகோணம் வட்டம் |

**திருக்கோயில் பாதுகாப்புப் படை**

**113.** திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், பொன், வெள்ளி ஆபரணங்கள், விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் உண்டியல்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக "திருக்கோயில் பாதுகாப்புப்படை" என்ற ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதில் **1000** இரண்டாம் நிலைக் காவலர்கள், **3000** முன்னாள் படைவீரர்கள் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்தது.

**2005–2006**–ஆம் ஆண்டுகளில் **1000** இரண்டாம் நிலைக் காவலர்களும் **2751** முன்னாள் படை வீரர்களும் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்தனர். கடந்த **2006–2011**–ஆம் ஆண்டுகளில் திருக்கோயில் பாதுகாப்பில் போதிய ஆர்வம் செலுத்தாததால் இந்த எண்ணிக்கை குறைந்து வருவதைத் தடுக்கும் வகையில் திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் படை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு

வந்த மாத தொகுப்பூதியம் **09.01.2012** முதல் ரூ.1,500/–லிருந்து ரூ.5000/– ஆக அரசு உயர்த்தியுள்ளது.

## VIII - கல்விப் பணியும், அறப்பணியும்

**கல்வி நிறுவனங்கள்**

**114.** இறைப்பணியோடு ஆன்மிக நெறிகளையும் பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு சமயம் மற்றும் பொதுக்கல்வி பயிற்றுவிக்க பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் பேணி வருகின்றன.

| வ. எண். | கல்வி நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 5 |
| 2. | தொழில்நுட்பக் கல்லூரி | 1 |
| 3. | மேனிலைப் பள்ளிகள் | 15 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 8 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 2 |
| 6. | தொடக்கப் பள்ளிகள் | 9 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |

| | | |
|---|---|---|
| 8. | மத்திய அரசுத் திட்ட மேனிலைப் பள்ளி | 1 |
| 9. | நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள் | 2 |
| 10. | வேத ஆகமப் பாடசாலைகள் | 2 |
| 11. | ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் | 2 |
| 12. | தேவாரப் பயிற்சிப் பள்ளிகள் | 2 |
| 13. | காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி | 1 |
| | **கூடுதல்** | **51** |

**கல்வி நிறுவனங்கள் விவரப் பட்டியல்**

**கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 3. | ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் |
| 4. | ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் |
| 5. | பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம் மாவட்டம் |

## தொழில்நுட்பக் கல்லூரி

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பழனியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |

## மேனிலைப்பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேனிலைப்பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம் |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேனிலைப்பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேனிலைப்பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர் மாவட்டம் |
| 4. | அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேனிலைப்பள்ளி, பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம் |
| 5. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேனிலைப்பள்ளி, மதுரை |
| 6. | அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேனிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் |
| 7. | அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் |

| | |
|---|---|
| 8. | தேவஸ்தான மேனிலைப்பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 9. | ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேனிலைப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டம் |
| 10. | டி.வேணுகோபால் செட்டி மேனிலைப்பள்ளி, சென்னை |
| 11. | இந்து மேனிலைப்பள்ளி, சென்னை |
| 12. | அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேனிலைப் பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 13. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மேனிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 14. | ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேனிலைப்பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் |
| 15. | அருள்மிகு பராசக்தி வித்யாலயா மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் |

**உயர்நிலைப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர் மாவட்டம் |
| 2. | அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர் மாவட்டம் |

| | |
|---|---|
| 3. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 4. | அருள்மிகு சுந்தரராஜ உயர்நிலைப்பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம் |
| 5. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 6. | ஸ்ரீ திருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 7. | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப்பள்ளி, சென்னை |
| 8. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் |

## நடுநிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 2. | திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் |

## தொடக்கப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப்பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 2. | சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம் |
| 3. | ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 4. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உதவி பெறும் தொடக்கப்பள்ளி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 5. | திருவாவடுதுறை ஆதினம் தொடக்கப்பள்ளி, திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம் |
| 6. | திருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 7. | அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப்பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம் |
| 8. | அஞ்சுகம் தொடக்கப்பள்ளி, கோடம்பாக்கம், சென்னை |
| 9. | பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப்பள்ளி, ஓட்டேரி, சென்னை |

**மெட்ரிகுலேஷன் பள்ளி**

| | |
|---|---|
| 1. | பழனி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |

**மத்திய அரசுத்திட்ட மேனிலைப்பள்ளி**

| | |
|---|---|
| 1. | பராசக்தி வித்யாலயா, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் |

**நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப்பயிற்சிப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம் |

**வேத ஆகமப் பாடசாலைகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |

**ஓதுவார் பயிற்சிப்பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |
| 2. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |

**தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 2. | மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர் மாவட்டம் |

**காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |

**வேத ஆகம பாடசாலைகள்**

**115.** திருக்கோயில் வழிபாட்டு முறைகள், திருமுறைகள், ஆகமங்கள் மற்றும் வேதங்கள் ஆகியவை குறித்த பயிற்சிகள் வழங்க "**மயிலையே கயிலை**" எனப் போற்றப்படும் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் சைவ ஆகம பாடசாலையும், வைணவ ஆகமங்களை பயிற்றுவிக்க "**பூலோக வைகுந்தம்**" என்று அழைக்கப்படும் திருச்சி ஸ்ரீரங்கம்

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் வைணவ ஆகம பாடசாலைகள் புதிதாக தொடங்கப்பட உள்ளன. இப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, தங்கும் வசதி ஆகியவற்றுடன் உதவித் தொகையும் வழங்கப்படும்.

**கல்வி நிறுவனங்களுக்கு தரச்சான்று**

**116.** பல்கலைக்கழக மானிய குழுவின் தன்னாட்சி அமைப்பான தேசிய தர மதிப்பீட்டு குழு பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிருவாகத்தால் நடத்தப்படும் அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளுக்காக சிறந்த செயல்பாடுகளுக்காக ‘A’ தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

**சமூக நல நிறுவனங்கள்**

**117.** திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு அறநிலையங்களாகவும் செயல்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவமனைகள், மனநலக் காப்பகங்கள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியன

திருக்கோயில்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு:

| சமூக நல நிறுவனங்கள் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கருணை இல்லங்கள் | 33 |
| 2. | மனநலக் காப்பகம் | 1 |
| 3. | முதியோர் இல்லங்கள் | 2 |
| 4. | சித்த வைத்தியசாலைகள் | 6 |
| 5. | ஆங்கில முறை மருத்துவனைகள் | 2 |
| | **கூடுதல்** | **44** |

**கருணை இல்லங்கள்**

**118.** இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஆதரவற்ற சிறுவர் மற்றும் சிறுமியருக்கு உணவு, இருப்பிடம், கல்வி ஆகிய உதவிகள் அளிக்கும் நோக்கத்துடன் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள **30** திருக்கோயில்களில் **33** கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சிறுவர் காப்பகங்கள் **22** மற்றும் சிறுமியர் காப்பகங்கள் **11** உள்ளன. கருணை இல்லங்களில் பயின்று +**2** பள்ளிக் கல்வி முடித்து மேற்படிப்பு தொடரும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ்

இயங்கும் கல்வி நிறுவனங்களில் முழுமையான கல்விக் கட்டண விலக்கும், இதர கல்வி நிறுவனங்களில் **50** சதவிகிதம் கல்விக் கட்டணம் திருக்கோயில் நிதியிலிருந்து படிப்பு முடியும் வரை வழங்கவும் அரசால் **2012–2013**–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் **91** மாணவ மாணவிகளுக்கு ரூ.**5,11,589/–** வழங்கப்பட்டது.

**119.** கடந்த ஐந்து ஆண்டுகளில் கருணை இல்லங்களில் சிறுவர், சிறுமியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக ரூ.**4.12** கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. **2015–16**–ஆம் ஆண்டில் மட்டும் ரூ.**1.68** கோடி செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**120.** கருணை இல்லங்களின் செலவினத்தை ஈடுசெய்ய ஒவ்வொரு வருடமும் அரசு மானியம் வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.**1.78** கோடி நிதி அரசு மானியமாக பெறப்பட்டது.

## கருணை இல்லங்கள் விவரம்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, திருவள்ளூர் மாவட்டம். |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் |
| 3. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 4. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 5. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |
| 6. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 7. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 8. | அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை |
| 9. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 10. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, ஈரோடு மாவட்டம் |
| 11. | அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை மாவட்டம் |

| | |
|---|---|
| 12. | அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர் மாவட்டம் |
| 13. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 14. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 15. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம் |
| 16. | அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில், தேக்கப்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 17. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில், அய்யம்பாளையம், திருப்பூர் மாவட்டம் |
| 18. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் |
| 19. | அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் |
| 20. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 21. | அருள்மிகு மகுடேஸ்வரசுவாமி வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில், கொடுமுடி, ஈரோடு மாவட்டம் |
| 22. | அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 23. | அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம் |

| | |
|---|---|
| 24. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 25. | அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 26. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர் மாவட்டம் |
| 27. | அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளிம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை மாவட்டம் |
| 28. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 29. | அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம், சென்னை. |
| 30. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், தாயமங்கலம், சிவகங்கை மாவட்டம் |

**மனநலக்காப்பகம்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், குணசீலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

**முதியோர் இல்லங்கள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். |

## சித்த மருத்துவமனைகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை. |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் |
| 5. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 6. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் |

## ஆங்கிலமுறை மருத்துவமனைகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி, சிவகங்கை மாவட்டம் |

**பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்**

**121.** இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதி செய்வதற்கு **5** கோடி ரூபாயும், கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு **5** கோடி ரூபாயும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் மூலம் பெறப்பட்டு இரு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தேவையான கட்டடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்திட நிதி உதவி வழங்கப்படுகிறது.

**122.** கடந்த ஐந்து ஆண்டுகளில் பள்ளி கல்வி நிறுவனங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு **223** பணிகளுக்கு ரூ.**40.58** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**கோசாலைகள்**

**123.** திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழனி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் உள்ளன.

**124.** திருக்கோயில்களுக்கு உபயமாக பெறப்படும் உபரி கால்நடைகள் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகிறது. திருக்கோயில்களில் இருக்கும் கோசாலைகளை நல்ல முறையில் பேணுவதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

## IX - திருக்கோயிலும், தமிழும்

**“போற்றி” நூல்கள்**

**125.** ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருளார்ந்த துறவிகளும் தாங்கள் சென்ற இடமெல்லாம் இறைவனைச் செந்தமிழால் போற்றிப் பாடி வணங்கியுள்ளனர். அத்தகைய அருளாளர்கள் அருளிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், நாலாயிர திவ்வியபிரபந்தம் ஆகியவை தமிழ் மொழி வளர்ந்து செழித்தோங்கிட துணையாக அமைந்துள்ளன. திருக்கோயில்களில் விரும்புவோருக்கு தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் “போற்றி” (அர்ச்சனை) நூல்கள் திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் புத்தாண்டு விழா**

**126. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தத்தால் நெடுங்காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை மரபு வழி வந்த முறைகளை மதித்து சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடும் பழக்கத்தை **13.04.2012** அன்று திரும்பக் கொண்டுவரப்பட்டது. இதை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் கொண்டாடினர்.

127. தமிழ்ப் புத்தாண்டு தினத்தையொட்டி **13.04.2012** அன்று முதல் ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் நாள் அன்று அனைத்து முக்கிய திருக்கோயில்களிலும் சிறப்பு பூஜை வழிபாடுகளும், சிறப்பு அன்னதானமும், சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி திருக்கோயில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது. அன்றைய தினம் திருக்கோயில்கள் வாழை, மாவிலைத் தோரணங்களுடன் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. பெருவாரியான பக்தர்கள் இப்புத்தாண்டு தினத்தில் திருக்கோயில்களுக்கு வருகை புரிந்து கொண்டாடி வருகின்றனர்.

**பாவை விழா**

**128.** ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையின்படி பாவை விழா மாவட்ட அளவில் மிக சிறப்பாக கொண்டாடப்படுகிறது. **2015–2016**–ஆம் ஆண்டு மாவட்ட அளவில் **32** மாவட்டங்களில் **7118** மாணவியர் பங்கேற்புடன், **1668** மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாவை விழா வெகு சிறப்புடன் நடத்தப்பட்டது.

**திருக்கோயில்களில் இசைவாணர் நியமனம்**

**129.** திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கள இசை இசைக்கப்படுவது வழக்கம். இவ்வழக்கம் திருக்கோயில்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருக்கோயில்களிலும், நாயன்மார்களால் பாடல்பெற்ற புகழ் வாய்ந்த தொன்மையான திருக்கோயில்களிலும், நாதஸ்வரம், தவில், தாள இசைவாணர்களை நியமனம் செய்து அவர்களுக்கு முறையே **ரூ.1,500/–**, **ரூ.1,000/–** மற்றும் **ரூ.750/–** வீதம் மாத ஊதியம்

வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை மூலம் அவர்களுக்கு இவ்வூதியம் வழங்கப்படுகிறது.

## X - அருளாளர்கள் விழா

### சேக்கிழார் விழா

**130.** இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னை, குன்றத்தூரில் சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்ட் திங்கள்தோறும் 12 நாட்களுக்கு பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன. ஆண்டுதோறும் குன்றத்தூரில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூல நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

### திருஞானசம்பந்தர் இசை விழா

**131.** சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா

ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு ஆணையரின் பொதுநல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**ஔவையார் விழா**

**132.** நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூல நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

**தாயுமானவர் விழா**

**133.** தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில் இத்துறை சார்பாக தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

## திருவள்ளுவர் திருநாள்

**134.** ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப்போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் கருத்தரங்கங்களும் பட்டிமன்றங்களும் நடத்தப்படுகின்றன.

## அருணகிரிநாதர் விழா

**135.** அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ஆவணி மாதம், ‘‘கேட்டை’’ நட்சத்திரத்தன்று ‘‘முக்திப்பேறுவிழா’’ ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

## கோச்செங்கட்சோழ நாயனார் விழா

**136.** அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், சதய நட்சத்திரத்தன்று

ஆண்டுதோறும் “கோச்செங்கட்சோழநாயனார் விழா” திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

**ஆழ்வார்கள் விழா**

**137.** பன்னிரு ஆழ்வார்களுக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆழ்வார்கள் விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

## XI - வெளியீடுகள்

**தலவரலாறும் தலபுராணமும்**

**138.** திருக்கோயில்களின் தொன்மை, வரலாறு, கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் தலவரலாறு நூல்களும், திருக்கோயிலையும் திருக்கோயில் அமைந்துள்ள ஊரையும் உள்ளடக்கிய தலபுராண நூல்களும் வெளியிடப்படுகின்றன. மேலும் சிறு திருக்கோயில்களுக்கும் அவற்றின் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்ள ஏதுவாக தகவல் அட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. தலவரலாறு மற்றும்

தலபுராண நூல்கள் தேவையடிப்படையில் பதிப்பு செய்தும், புதுப்பித்தும் வெளியிடப்படுகின்றன.

**பயணியர் மாவட்ட கையேடுகள்**

**139.** பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக, முக்கியமான நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து அனைத்து மாவட்டங்களுக்கும் தனித்தனியே பயணியர் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய கையேடுகள் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில் கொண்டு இவை இத்துறை வலைதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

**“திருக்கோயில்”– திங்களிதழ்**

**140.** இந்து சமய அறநிலையத் துறையால் **1958**–ஆம் ஆண்டு முதல் “திருக்கோயில்” என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்படுகிறது. தற்போது இந்த மாத இதழ் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகளுடன், எழில்மிகும் வண்ணங்களுடனும் வெளியிடப்படுகிறது. **2013**–ஆம் ஆண்டு

முதல் ஒவ்வொரு தமிழ்ப் புத்தாண்டிற்கும் சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.

**ஆகம நூல்களையும், இதர நூல்களையும் தமிழில் வெளியிடுதல்**

**141.** வடமொழி ஆகம சாத்திர நூல்களும், சிற்ப சாத்திர நூல்களும் தமிழர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த வகையில் உத்ரகாமிக ஆகமம் மற்றும் குமார தந்திரம் ஆகிய நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. மேலும் ‘‘இந்து மத இணைப்பு விளக்கம்’’, ‘‘சைவமும் வைணவமும்’’ ‘‘ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்ப நூல்’’ போன்ற தமிழ் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதுபோன்ற நூல்கள் தேவையின்போது மறுபதிப்பு செய்து வெளியிடப்படும்.

## XII - பயிற்சித்திட்டங்கள்

**புத்தொளிப் பயிற்சித் திட்டம்**

**142.** திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் தங்கள் பணிகளைத் திறம்பட செய்திட ஏதுவாக **1991–**ஆம் ஆண்டு ‘‘புத்தொளிப் பயிற்சித் திட்டம்’’ தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. **2002–**ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் **488** நபர்கள் பயிற்சி பெற்றனர். **2006–2011–**ஆம் ஆண்டில் இந்த திட்டம்

செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் பயன்பெறும் வகையில் ஆறு வார கால புத்தொளிப்பயிற்சி தொடங்கப்பெற்று கடந்த ஐந்து ஆண்டுகளில் **8436** ஊழியர்கள் பயனடைந்தனர். ஆண்டுதோறும் இப்பயிற்சி அளிக்கப்படும்.

**பொறியாளர்களுக்கு “பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு” என்னும் குறுகிய காலப் பயிற்சி**

**143.** நாட்டில் முதல்முறையாக இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து “பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு” என்ற தலைப்பில் **3.12.2014** முதல் **13.01.2015** வரை இந்து சமய அறநிலையத் துறை மற்றும் திருக்கோயில்களைச் சேர்ந்த **22** பொறியாளர்களுக்கு குறுகிய கால ஆறுவார காலப்பயிற்சி ஒன்று தொல்லியல் துறையால் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் தொல்லியல் விதிகளின்படி கோயில்களை பாதுகாப்பது மற்றும் புனரமைப்பது தொடர்பான விவரங்கள் பொறியாளர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் பயிற்றுவிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, மேலும் **22** பொறியாளர்களுக்கான பயிற்சி **19.03.2015** அன்று மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை

அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, **29.04.2015** அன்று நிறைவடைந்தது. இப்பயிற்சி இந்த ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும். இப்பயிற்சிக்கான பாடத்திட்டம் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் தொல்லியல் வல்லுநர்கள் மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐஐடி) மற்றும் இதர பேராசிரியர்களைக் கொண்ட குழுவால் உருவாக்கப்பட்டது.

**திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்னும் குறுகிய காலப் பயிற்சி**

**144.** இந்து சமய அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்ற குறுகிய கால நான்கு வார கால பயிற்சி, திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு தொல்லியல் துறையால் நடத்தப்படவுள்ளது. நிருவாகக் கண்ணோட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பொறியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் எளிமையான வடிவமாக இது அமையும்.

**மனித நேயப் பயிற்சி**

**145.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு கடந்த ஐந்து ஆண்டுகளில் முக்கியத் திருக்கோயில்களின் **16063** ஊழியர்களுக்கு மனித நேயப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும்.

## XIII - திருக்கோயில் ஊழியர் நலத்திட்டங்கள்

**நலத்திட்ட விவரம்**

**146.** இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் ஊழியர்கள் பல்வேறு வகையினத்தில் பணிபுரிகின்றனர். இவர்களது நலன் காத்திட ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:

| **நலத்திட்ட விவரம்** | |
|---|---|
| 1. | பணியாளர்கள் சேமநல நிதித்திட்டம் |
| 2. | துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் |
| 3. | குடும்ப நல நிதித் திட்டம் |

| | |
|---|---|
| 4. | சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் |
| 5. | முதலமைச்சரின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் |
| 6. | திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம் |
| 7. | அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்வியபிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர் ஆகியோருக்கு ஓய்வூதியத் திட்டம் |
| 8. | திருமணம், பண்டிகை மற்றும் வாகனம் வாங்குவதற்கு முன்பணம் |
| 9. | கருணை அடிப்படையில் பணிநியமனம் |
| 10. | குடமுழுக்கு ஊக்கத் தொகை |
| 11. | ஆண்டுத் திருவிழாக் காலங்களில் கூடுதல் நேரப் பணி ஊக்கத் தொகை |
| 12. | பொங்கல் கருணைத் தொகை |
| 13. | உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளரின் மகன்/மகளுக்கு நிதியுதவி |
| 14. | திருக்கோயில் பணியாளர்களுக்கு சீருடைகளும் அடையாள அட்டைகளும் வழங்குதல் |
| 15. | திருக்கோயில் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி அளித்தல் |

**குடும்ப நல நிதி**

**147.** பணியிலிருக்கும் போது இயற்கை எய்தும் திருக்கோயில் ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்காக ‘‘குடும்ப நல நிதித் திட்டம்’’ ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களின்

உபரி நிதியிலிருந்து இதற்கென ரூ.15 கோடியில் மைய நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, பணியிலிருக்கும் போது இயற்கை எய்தும் ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 329 வாரிசுதாரர்களுக்கு ரூ.3.25 கோடி வழங்கப்பட்டது.

**சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்**

**148.** ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் ஊழியர்களின் நலனுக்காக “சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்” ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தைக் கொண்டு மூல நிதி ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு திருக்கோயில் ஊழியரும் ஓய்வு பெறும் போது அவரது பணி நாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வட்டி தொகையிலிருந்து பணிக்கொடை ரூ.5,000/–மும் சேர்த்து வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 593 ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ரூ.26.93 இலட்சம் வழங்கப்பட்டது. 2015–2016–ஆம் ஆண்டு மட்டும் 145 ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ரூ.7.01 இலட்சம் வழங்கப்பட்டது.

**மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

**149.** இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் திருக்கோயில் ஊழியர்களில் ரூ.72,000/–க்கும் அதிகமாக ஆண்டு வருமானம் உள்ள, ஊதிய விகிதம் பெறும் திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – 2012–ன்கீழ் பயன்பெற **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் **3412** திருக்கோயில் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

**2013**–ஆம் ஆண்டில் ரூ.72,000/– மற்றும் அதற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் **10391** திருக்கோயில் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெற்றனர்.

**திருக்கோயில் ஊழியர் நல நிதித் திட்டம்**

**150.** ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் ஊழியர்களில் ரூ.750/–க்கும் குறைவாக மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஐந்து கோடி ரூபாய் மூல நிதியுடன் ‘‘திருக்கோயில் ஊழியர் நல நிதித் திட்டம்’’ செயல்படுகிறது. இந்த மூல நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மேற்கண்ட திருக்கோயில் ஊழியர்களின் சம்பள நிலுவைத் தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் **5821** திருக்கோயில்களில் பணிபுரியும் **7282** ஊழியர்களுக்கு ரூ.**3.77** கோடி சம்பள நிலுவை வழங்கப்பட்டது. **2015–2016–**ஆம் ஆண்டு **2068** திருக்கோயில்களில் **2466** ஊழியர்களுக்கு ரூ.**1.38** கோடி சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளது.

**கருணை அடிப்படையில் பணி நியமனம்**

**151.** திருக்கோயில்களில் பணியாற்றும்போது, காலமான திருக்கோயில் ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு ‘‘கருணை அடிப்படையில் பணிநியமனம்’ செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில்

107 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டன. 2015–2016–ஆம் ஆண்டில் மட்டும் 13 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டன.

**தற்காலிக பணியாளர்கள் பணிவரன்முறை**

**152.** திருக்கோவில்களில் தற்காலிகமாக தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் 31.7.2014 தேதியில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பணியாற்றி வந்த 2078 பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பணியாளர் ஓய்வூதிய திட்டங்கள்**

**அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்வியபிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு ஓய்வூதியம்**

**153.** திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்விய பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு நிதியிலிருந்து இத்துறை மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/– ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

**154. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ரூ.750/– மாத ஓய்வூதியத்தை ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 364 ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் | அரசால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஓதுவார் | 125 | 26 |
| 2. | வேதம், பிரபந்தம் மற்றும் அரையர் | 59 | 11 |
| 3. | இசைக் கலைஞர்கள் | 125 | 50 |
| 4. | அர்ச்சகர் (சைவம் மற்றும் வைணவம்) | 691 | 277 |
| | **கூடுதல்** | **1000** | **364** |

**திருக்கோயிலில் பணிபுரியும் பிற ஊழியர்கள் ஓய்வூதியத்திட்டம்**

**155.** திருக்கோயில் ஊழியர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் **2006**–ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(i) பணியாளர் சேமநலநிதித் திட்டம்**

**156.** நிதி வசதிமிக்க திருக்கோயிலில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். திருக்கோயில் ஊழியர்களில், ஓய்வு பெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு, பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின் (Employees Provident Fund) மூலம் **1.3.2006** முதல் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்**

**157.** நிதிவசதி குறைவாக உள்ள திருக்கோயில் ஊழியர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் **(1.3.2006)** ஓய்வு பெற பத்து ஆண்டிற்குக் கீழ் பணிக்காலம் உள்ளவர்களுக்கும், பணியாளர் சேம நல நிதித்திட்டத்தில் சேரும் அளவு நிதிவசதியில்லாத கோயில்களில்

உள்ளவர்களுக்கும் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

158. இந்த துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் (Departmental Pension Scheme) கீழ் ஓய்வூதியம் அளிப்பதற்கு ஏதுவாக, நிதிவசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.50 கோடி உபரிநிதியினைப் பெற்று மூல நிதி உருவாக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஓய்வு பெறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.800/–லிருந்து ரூ.1000/–ஆக 2013–2014 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

159. 2015–2016–ஆம் நிதியாண்டில் 368 ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு இத்திட்டத்தின்படி ஓய்வூதியம் பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 4338 ஊழியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**160. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி 1996–க்கு முன்னர் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் இத்துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 66 ஓய்வு பெற்ற ஊழியர்கள் பயன்பெறுகின்றனர்.

**திருக்கோயில் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்**

**161.** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பு (Professional courses) பயிலும் திருக்கோயில் ஊழியர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை நிதியுதவியாக வழங்க இத்திட்டம் வழிவகை செய்கிறது.

## XIV - கிராமப்புற பூசாரிகள் நலன்

**கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்**

**162.** இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, கிராம திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்குக் “கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்” உருவாக்கப்பட்டு அதன் மூலமாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை **606** பயனாளிகளுக்கு ரூ.**20** இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்**

**163.** இத்துறையின் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் **20** ஆண்டுகள் பணிபுரிந்து **60** வயதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.**750/–**லிருந்து ரூ.**1000/–** ஆக உயர்வு செய்து **22.11.2013** முதல் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலமாக **3037** கிராமக் கோயில் பூசாரிகள் பயன்பெறுகின்றனர்.

## XV - மகாமகம்

**164.** மகாமகம் பெருவிழாவானது **22.02.2016** அன்று நடைபெற்றது. இப்பெருவிழாவானது **13.02.2016** அன்று கொடியேற்றத்துடன் துவக்கப்பட்டு, **22.02.2016** அன்று தீர்த்தவாரியுடன் முடிவடைந்தது. கும்பகோணத்தில் உள்ள **12** சைவ திருக்கோயில்களின் சுவாமிகள் மகாமக திருக்குளத்தில் எழுந்தருளி தீர்த்தவாரி நடைபெற்றது. காவிரி நதிக்கரையில் ஐந்து வைணவத் திருக்கோயில்களுக்கு தீர்த்தவாரி நடைபெற்றது. மகாமகத்தை ஒட்டி கும்பகோணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள **64** திருக்கோயில்களுக்கு திருப்பணி

செய்து குடமுழுக்கு செய்யப்பட்டது. மகாமகக் குளம் மற்றும் பொற்றாமரைக் குளம் ஆகிய குளங்கள் சீரமைக்கப்பட்டன. மகாமகத்திற்கு வருகை தந்த பக்தர்கள் இடைஞ்சலின்றி மகாமகக் குளத்திலிருந்த 20 கிணறுகளிலும் புனித நீராட வசதியாக தண்ணீர் அளவு குறைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த தண்ணீரும் தொடர்ந்து மறு சுழற்சி செய்து சுத்திகரிக்கப்பட்டது. இந்த மகாமகத்திற்கு அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களின் சுலபமான தரிசனத்திற்கு சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனைத்து திருக்கோயில்களிலும் கண்காணிப்புக் கேமராக்கள் நிறுவப்பட்டன. மகாமகப் பிரசாதம், மின்னஞ்சலில் முன் பதிவு செய்யும் முறையும், பிரபலமான திருக்கோயில்களில் முன் பதிவு செய்யும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. மகாமகம் 2016–க்கு என துறையினால் வலைதளம் ஏற்படுத்தப்பட்டது. மகாமகத்திற்கென சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. கொடியேற்றிய நாள் முதல் தீர்த்தவாரி நாள் வரையும் அதன் பின்னர் ஒரு மாத காலத்திற்கு பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மகாமக திருக்குளத்திலும், பொற்றாமரைக் குளத்திலும், காவிரி நதிக் கரையிலும் புனித நீராடினார்கள்.

## நிறைவுரை

"கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்வில ராகிச் சார்வது சதிரே... "

எனும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கேற்ப ஆன்மீக அன்பர்கள் அனைவரும் திருக்கோயில் வளாகத்தில் புலனொடுங்கி மனம் குவிந்து தலையார வணங்கி, இறைவனின் தாள்சேரும் வகையில், தேவையான அத்தனை நடவடிக்கைகளும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத் திருக்கோயில்கள் சமூக அமைப்பு, இறையாண்மை மற்றும் கலை வளர்ச்சிக்கான அடித்தளங்களாக காலம் காலமாகச் செயல்பட்டு வந்துள்ளன. அறச்சாலைகளாகவும், மன்பதை நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், போர்க்காலங்களில் படைவீடுகளாகவும் விளங்கி வந்த பழஞ்சிறப்புகள் எல்லாம் கால வெள்ளத்தில் சிதறின. நலிவடைந்து வந்த பாரம்பரிய பண்பாட்டுச் சிதறல்களை மீட்டு அன்னதானம், ஒருகாலபூஜைத் திட்டம், ஆண்டுத் திருப்பணிகள், முறையாக குடமுழுக்குகள் என பல்வேறு இறைபணிகளையும் அறப்பணிகளையும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா**

அவர்கள் நல்லாட்சியில் செய்யப்பட்டு வருகின்றன. தமிழக மக்கள் கூர்ந்து நோக்கத்தக்க நிலையான வரலாற்றுச் சாதனைகளாக அவை விளங்குகின்றன. அச்சாதனைகள் பின்வரும் பட்டியலாக விரிகிறது.

- ❖ சமூக நோக்கோடு **724** திருக்கோயில்களில் அன்னதானம்
- ❖ ஸ்ரீரங்கம் மற்றும் பழனி திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம்
- ❖ திருக்கோயில் யானைகளின் மனநலமும் உடல்நலமும் பேண புத்துணர்வு முகாம்
- ❖ வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் முதல் கிராமப்புறத் திருக்கோயில்கள் வரை **8843** திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து கும்பாபிஷேகம்/ சம்ப்ரோசஷணம் நிகழ்த்தியது
- ❖ ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் சார்பாக ரூ.**47.09** கோடி மதிப்பீட்டில் யாத்ரி நிவாஸ் கட்டடம் கட்டப்பட்டது. திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் மற்றும் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் நிதி மூலம் யாத்ரி நிவாஸ் கட்டுமானத்திட்டம்

- ❖ திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி பொருத்த நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு முழு நிதியுதவி
- ❖ திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற நடவடிக்கை
- ❖ இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமக்கோயில்களில் பணிபுரிந்த பூசாரிகள் மாத ஓய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்வு
- ❖ திருக்கோயில் ஊழியர்களுக்குத் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்வு
- ❖ தொன்மையான திருக்கோயில்களை திருப்பணி செய்து பாதுகாக்க தொல்லியல் ஆலோசனை பெற தொல்லியல் ஆலோசனை வல்லுநர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்
- ❖ பழமையான ஓவியங்களை பழமை மாறாது தொல்லியல் மரபுப்படி புதுப்பித்துப் பராமரிக்க ஆலோசனைக் குழு நியமனம்
- ❖ கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை நிர்வகிக்க ஒரு கோடி ரூபாய் அரசு மானியம் மூன்று கோடி ரூபாயாக உயர்வு

- ❖ திருக்கோயில்களின் திருப்பணி மேற்கொள்ள ஆண்டுதோறும் வழங்கும் மூன்று கோடி ரூபாய் அரசு மானியம் ஆறு கோடி ரூபாயாக உயர்வு
- ❖ இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தில் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் பெற கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும் எனும் சட்டத் திருத்தம்

இத்தகைய ஆக்கப்பூர்வ திட்டங்களால், மனிதன் பொருள் உலகத்திற்கு அப்பால் அமைதியாக தன் மனதைச் செலுத்தி மெய்ப்பொருளைத் தொழ வைத்த பெருமை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களையே சேரும். திக்கெட்டும் புகழ்பெற்ற திருக்கோயில்களை பலவகையிலும் மேம்படுத்தியதால் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தமிழர்களின் பாரம்பரியத்தை பாதுகாப்பதில் நிலைக்களமாக விளங்குகிறார்.

“குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக்கோட்டமும்”

எனும் மணிமேகலை வரிகளுக்கேற்ப திருக்கோயில்களில் அமைந்துள்ள மனதிற்கு நிறைவளிக்கும் சிற்பங்களும், அமைதி

தரும் ஓவியங்களும், இதயத்திற்கு இதம் தரும் பண் இசையும் முன்னோர்கள் நமக்கு அளித்த கருவூலங்கள். அதன் தொன்மை அறிந்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் மேலான வழிகாட்டுதலின் கீழ் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றி துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர்.

**சேவூர் S. இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்.